சிவமயம்.

முருகக்கடவுள் துணை.

# சிவபாததோத்திரபூஷணம்.

இது

யாழ்ப்பாணத்துப் புலோலியம்பதி,

பசுபதீசுவரசுவாமிகோயிற் கீழைவீதியில் இருக்கும்

சிவனடியார்க்கடியாராகிய

## இ. வி. ஐயம்பிள்ளையவர்கள்

இயற்றியது.

சென்னை

ஸ்ரீமட்டுவார்குழலம்பாள் அச்சுயந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

பிலவ௵ ஆவணிமீ.

1901.







# முகவுரை.

அநாதிமல முத்த சித்துவியாபக சச்சிதானந்த அகண்ட, கார ரூபியாய், ஆதிமத்தியாந்த சமாரூஹிக நாமரூப குணரஹித பரப்பிரம பரஞ்சோதிப் பிழம்பாய், உடல் உயிர், கண் அருக்கன் அறிவொளிபோற் *பிரிவரும் அத்துவிதப் பொருளாய், சமயகோடிகளெலாந் தந்தெய்வம் எந்தெய்வமென்று எங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதாய், வேதசிவாகமங்களிற் பிரதிபாதிக்கப்பட்ட மெய்த்தெய்வமாய் விளங்காநின்ற சிவ பெருமானே முழுமுதற்கடவுளென்றும், வைதிக சைவ சுத்தாத்துவித சைவசித்தாந்தமே மெய்ச்சமயமென்றும், மூர்த்தி

தலங் தீர்த்தமென்னு மூன்றுஞ் சிவவடிவங்களே யென்றும், அவற்றை முறையே வழிபட்டார் பரமஞானாசாரியனது திருவருட்பேற்றை யடைவார் என்றுங் கொண்டொழுகும் சிவநேயச்செல்வர்களே !

அம்புவியினை மிக்கமெய்ஞ் ஞானியைக் கண்டாலு
மதுவுமொரு வேட மென்பா
ராகம புராணமறு நூல்விரும் பார்கள்பரி
யாசகதையேமெச்சுவார்
கம்பமிசை யொருகோடி காணமிட்டாலுமது
கண்கட்டு வித்தை யென்பார்
கற்பனை யலங்கார மாய்க்கவிகள் பாடினுங்
கற்றவர்க் கெளிதி தென்பார்
நம்பிவிசு வாசமொடு துதிசெய்யி னுங்கள்ள
ஞானமென் பார்க ளவையோ
னையந்தகலி யுகமகிமை யிந்நிலையுஞ் சிலபேர்
நவின்றுகுறை சொல்வர் கண்டாய்.

என்றபடி, இக்காலத்துள்ளாரிற் பலர், தேவார திருவாசக முதலிய திருமுறைகளை யருளிச்செய்த பெரியோர்கள் அருளாளர் என்பதையும், அந்தத் திருமுறைகள் எல்லாம் வல்ல இறைவன் திருவருளாற் பாடப்பட்ட அருட்பாக்கள் என்பதையும், அவற்றால் அநேக திவ்வியாற்புதங்கள் விளைந்தன வென்பதையும், விதிவயத்தானே யுண்மையெனக் கொள்ளாது நிந்தித்து எரிவாய் நரகிற் கிரையாகின்றனர். " துன்மார்க்கர்க் காயிரந்தான் சொன்னாலு மறந்துவிட்டுத் தடுக்கேசெய்வார்- சன்மார்க்கர்க் கொருவார்த்தை சொலுமளவே மெய்யதனிற் றழும்பாக் கொள்வர் "

என்றாங்கு, அவர்கட்கு நல்லறிவுச்சுடர்கொளுத்தி யுய்வித்தல்கல்லைக்குத்தி நாருரித்த லொக்கும். இங்ஙனமாகவும் சுத்த சாட்குண்ய பரிபூரண பரமபதி, அவ்வுண்மைகளையெல்லாஞ் யாவரும் எளிதினுணர்ந்துய்யும் பொருட்டு அளித்த பிரத்தியக்ஷப்பிரமாணம் போன்றது இந்நூலேயாம். இந்நூல் செய்தவரை நன்கு உணர்ந்தார்க்கு அது செவ்வனே புலப்படும். என்னை? இப்பாடல்களைப்பாடியவர் திரிகோணமலை திருக்கேதீச்சரம் என்னுந் தேவாரம் பெற்ற திருத்தலங்களையும், கதிர்காமம் என்று வழங்கும் ஏமகூடம் எனப் பெயரிய திருப்புகழ் புனைந்த திவ்விய க்ஷேத்திரத்தையும் தன்வயிற்கொண்டு முக்கணுடைச் செக்கரஞ்சடைத் தேவதேவனைப்போல விளங்கும் இலங்கையின் ஓர்பாகமாகிய யாழ்ப்பாணநகரத்திலே, செந்தமிழ் நாவலரும் அந்தமிழ் செல்வரும் நிறைந்த புலோலியம்பதியிலே, கி. பி. 1857 ௵ பிப்ரவரிமாதத்திற்குச்சரியான பிங்கள ௵ தைமீ 22௳ வினாசித்தம்பிப்பிள்ளை என்பவர்க்குத் தவப்புதல்வராய்த் தோன்றினர். இவர் ஒருநூலையாயினும் முறையாக ஆசிரியரிடத்துப் பயின்றவரல்லர். ர-ற, ழ-ள, வித்தியாசமொழிகடாமுமிவர்க்குத் தெரியாது. அங்ஙனமாய இவர் தங்காலங்களையெல்லாம் கமத்தொழிலினும் வர்த்தகத்தொழிலினுமே கழித்துக், கொழும்புசென்று வர்த்தகஞ் செய்தக்காலை, கதிர்காமக் கடவுளின் திருவருளால் ஆங்குள்ள மகான் ஆகிய ஸ்ரீபரமஹம்ச பரிவிராசக யானைக்குட்டிச்சுவாமிகளின் தரிசனமாத்திரையானே உலகவிரத்தியும் அன்பும்மேலிட, படைவீடாறனுட் சிறந்து விளங்கும்திருச்செந்தூர்ப்பதியுக்கு, அடி

யார் வேண்டியனவற்றை வேண்டி யாங்கு எளிதிற் றோன்றியருள்பவரும், ஸ்ரீமத் குமரகுருபர சுவாமிகள் முதலிய ஆப்தர்க்குச் சொற்சுவை பொருட்சுவை செறிந்த கவிகளைப்பாடும் வரத்தையும் பிரசாதித்தருளியவரும் ஆகிய ஸ்ரீசுப்பிரமணியக் கடவுளைத் தரிசித்து, கண்ணீராறாய்ப் பெருக, உரோமம் புளகிப்ப, ஆனந்தக் கூத்தாடி யன்புடன் றொழுது வந்தார். பெருமானுடைய திருவருளாற் பாடுஞ் சக்தி தோன்றப் பாடினார். அதுவே முதன் முதற் றரிசித்த தலம். இந்நூலைப் பார்க்கும் ஒவ்வொருவரும் கடவுளின் பேரன்பாற் பாடப்பட்டதென்று வியப்படையாதிரார். இதனாற் குமரகுருபரசுவாமிகள் திருச்செந்தூர்ப்புராண ஆசிரியர்முதலாய மகான்களும், அதற்கு மேலாய தெய்வத்திருவருள் கிடைத்துப் பாடினார் என்பதிற் சந்தேகமின்று. பண்டைக்காலத்துத் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்முதலிய சைவசமயபரமாசாரியர்களும் காரைக்காலம்மையார், பட்டினத்துப்பிள்ளையார், அருணகிரிநாதர் முதலிய திருத்தொண்டர்களும் அங்ஙனம் பசுகரண நீங்கிப் பதிகரணம் பெற்றுச் சாக்கிரத்தே யதீதநிலைக்கணின்று அத்துவிதபாவனையுடனருளினர் என்பதிலையன்றோ? இவர் அத்திருச்செந்தூரினின்று நீங்கிப் பற்பல திருத்தலங்களையுந் தரிசித்து ஒவ்வொன்றற்கும் பதிகம்பாடினர். தரிசித்த முறையும் பதிகமுறைகளும் எண்வரிசையாற் காண்க.

இங்ஙனந் தரிசித்துவருநாளிலே தேவகோட்டையிற் சென்றிருந்தகாலத்து, ஆங்குள்ள வைசியபிரபுக்களுளொருவரா

யிருந்த ம-ா-ா-ஸ்ரீ, கு. இராமன் செட்டியார் என்பவர் ஓர் நோயாற் பீடிக்கப்பட்டு, பற்பல பரிகாரங்கள் செய்தும் பயன் படாதிருக்க, இவரிடம் வந்து கேட்டகாலத்து ஓர் பதிகம்பாடி. நடராசமூர்த்தியை வேண்டத் தீர்ந்தது. அந்தப்பதிகம் இருபத் திரண்டாம்பதிகமாகும். இச்செய்யுளே யிங்ஙனம் செய்யுமா யின், முந்தைப் பெரியோரது திருவருட்பாக்கள் முதலையுண்ட பாலனையழைத்ததும், பெண்பாற்றூதனுப்பியதும், கல்லைப் பெண்ணாக்கியதும், கற்றோணியாக்கியதும், விடத்தாலிறந்தா ரையுயிர்ப்பித்ததும், என்பைப்பெண்ணாக்கியதும், வையைக்க ணேடேறச்செய்ததும், கூன்மாற்றியதும், நரியைப்பரியாக்கி யதும் மூகைதீர்ந்ததும் முதலாய திவ்வியாற்புதங்களை நிகழ்த் தினமை ஓர் அதிசயமாமோ ?

இப்பாக்கள் அன்புமேலீட்டாற் பாடப்பட்டபடியால் அவற்றிற் சிலபாகங்களின் சீர்முதலாயினவுஞ் சந்தங்களின் பேதமும் இருந்தும் அவற்றை யங்ஙனே விடப்பட்டது. இப்ப திகங்கள் மகாகனம்பொருந்திய ஆரணிமகாராசா அவர்களின் சமஸ்தான வித்துவானும், C·M-S-Z-கலாசாலைத்தமிழ்ப்பண் டிதரும், சென்னை வேதாந்தப் பிரசங்கசபை, சைவசித்தாந்த சஞ்சீவினிசபை என்னு மிவ்விருசபைகளின் கௌரவப்பிரசார கரும் ஆகிய மாயாவாததும்சகோளரி (யாழ்ப்பாணத்து மேலைப் புலோலி) ஸ்ரீமான் நா. கதிரைவேற்பிள்ளை அவர்களது சமு கத்திற் பிழையறப் பரிசோதிக்கப்பட்டுச் சிறப்புறப் பதிப்பிக் கப்பட்டன. ஆகலின் எமது ஆசிரியராகிய பிள்ளையவர்கள்

செய்த பெருநன்றிகளென்று மறக்கற்பாலதல்ல. ஷை நூல் பாடிய ம-ா-ா-ஸ்ரீ இ. வி. ஐயம்பிள்ளையவர்களைத் தெரிந்தார் இவர்தாம்பாடினரோவென்று சந்தேகங் கொள்ளற்க! கொள்ளற்க! ஒவ்வொரு பாடல்களும் சொன்னயம் பொருணயங்கள் முதலிய நயங்களுஞ் செறிந்து துலங்குகின்றன. சிலபதிகங்களில் சிவபெருமான், விநாயகர், சுப்பிரமணியர் தேவியார் இவர்களின் நாமம் குணம் தொழில்களை அபேதகாரணம்பற்றி அவ்வம் மூர்த்தங்களுக்கே கூறாது, மற்றொன்றற்கும் வைத்துக் கூறப்பட்டிருக்கின்றன. அது மூர்க்கையோராது அநுபவ வழக்காதலிற் குற்றமன்றென்பதை யுணரக்கடவர். அன்பர்களே தத்துவங்களையெல்லாங் கடந்து நின்ற தனிப்பரம்பொருளாகிய சிவபெருமான் பத்திவலையினன்றி வேறொன்றற்கும் அகப்படார்! அகப்படார்!! அறிந்துய்மின்! அறிந்துய்மின்!! சயமமிதுவே! சயம் சயம்.

இங்ஙனம்.

ஷை பரிசோதனரின் மாணாக்கருள் ஒருவர் ஆகிய

**ரா. சோமசுந்தரமுதலியார்.**

சென்னை

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# சிவபாதஸ்தோத்திரபூஷணம்.

## முதலாவது-திருச்செந்தூர்.

### விநாயகர் வணக்கம்.

செய்ய திருமலர்த்தா டொழுதேன் றிருச்செந்தினக
ரையனணி திகழ் கோபுரமேவியவைங்கரனே
மையலகற்றியிம் மாயப்ரபஞ்சமயக்கமறத்
துய்யமுருகனையான் பாடவேயருளுத்தமனே.

மையார்விழியுமைமைந்தகந்தாநின்மலர்ப்பதத்தை
மெய்யாகநம்பிவிரும்பிவந்தேன்வினைதன்னில்வந்த
பொய்யாமுலகநடிப்பையிம்மாயப்புழுக்குழியில்
வையாதருள்புரிவாய்வள்ளிநாயகமாமணியே. (க)

கையாறிரண்டுமுகமாறுடன்பர்கருத்திலுறை
மெய்யாறுதொண்டர்வினையாறநீக்கிவிருப்பமிக்க
செய்யாறுதந்துதெவிட்டாதபேரின்பத்தேனருளு
மையாவருட்செந்தியற்புதனேயெனையாண்டருளே. (உ)

பையாரரவந்தரித்தபிரான்றந்தபாலனுநீ
கையாறிரண்டுடைக்கந்தனுநீசுரர்காவலனீ
மெய்யாதரவென்றடைந்தோர்க்கருள்புரிவேலனுநீ
செய்யாதிருச்செந்திற்சேவகனேவினைதீர்த்தருளே. (ங)

நாயென்றுவென்றனையாட்டியதாமென்றநானுணர்ந்து
தாயென்றுவுன்றனைத்தேடிவந்தேன்சண்முகாவுனது
சேயென்றறிந்துமிரங்காமலென்றுரைநீயிருந்தாற்
பேயென்றுணிந்துபிடிக்கும்பதமெதுபோமுதே. (௪)

மன்னாநற்றேவர்க்குமற்றுமுண்டானமறைதனக்கு
முன்னாகற்றோர்க்குமறிதற்கரியமுழுமுதலே
பன்னாகத்தன்னிற்றுயில்வோன்மருகபவமகற்றித்
தன்னாருடருவாய்செந்திமாநகர்த்தற்பரனே. (௫)

பொன்னாடர்போற்றும்புகழ்ச்செந்தில்வாழுநற்பூபதியே
யென்னாடலற்றுன்னிணையடியேநம்பியிங்குவந்தே
னுன்னாதரவன்றிவேறோர்துணையுமுலகத்திலை
மன்னாமலர்ப்பதம்போற்றியர்ச்சிக்கமகிழ்ந்தருளே. (௬)

சீரார்திருச்செந்தில்வாழுநற்சேவற்கொடியுடைய
பேரார்பெருமயில்வாகனனேயுன்றன்பின்றொடர்ந்தே
னாராருமற்றுமுறவினர்தாமுமுலகத்திலே
யாராருமில்லையடியேனையாண்டருளற்புதனே. (௭)

சேயேசரணந்திருவேசரணந்திருச்செந்தில்வாழ்
வாயேசரணம்வரதாசரணம்வனத்துவள்ளி
யாயோலமென்றகுரல்கேட்டகமகிழ்ந்தன்புவைத்த
மாயாவினோதசரணஞ்சரணமகிழ்ந்தருளே. (௮)

கந்தாவனசமலர்ப்பதம்போற்றிகருணைதனைத்
தந்தானுமுன்றனருட்சத்திபோற்றிதணிகைமலை

யெய்ந்நாய்கினதன்பரெல்லார்க்கும்போற்றியிமயவல்லி
மைந்தாவடியனைவந்தாணற்செந்திலவரோதயனே. (௯)

வள்ளிமனோகரவாழிதிருச்செந்திவாழிகந்தன்
புள்ளிமயிறுவாழிபுலவரும்பூமகரும்
தெள்ளியதேவரும்வாழிசிதம்பரத்தேநடிக்கு
மொள்ளியபாதமும்வாழிநல்வாழியுலகமுமே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

ஆகச்செய்யுள் - ௧௧.

---

## இரண்டாவது-திருப்பரங்குன்றம்.

### வெண்பாவந்தாதி.

திருச்சிற்றம்பலம்.

அத்தி முகத்தோ டவதரித்து னன்பருக்குச்
சித்தியருண் முத்திமுதற் செந்திருவே—மெத்துபரங்
குன்றந் தனிலவாழ் குமரேச ரைப்பாட
வென்றைக்கு மேழைக் கருள்.

பன்னிருகை வேலா பரங்குன்றத் தேநடிக்கு
முன்னிருதா ளைம்பி யுகந்துவந்தே—னென்னிருகண்
கண்டு மனத்திற் களிகூர்ந்தேன் காங்கேயா
வின்று பவமகற்றி யாள். (௧)

ஆள்வாய் பவமகற்றி யப்பா வறுமுகவா
தாழ்வாய் நினைந்தென்னைத் தள்ளாதே—மாளாம
லேந்தி வளர்த்தபிள்ளை யென்னகுற்றஞ் செய்தாலும்
பாந்த மகற்றுவரோ யார். (௨)

பாராய் பராபரமே பன்னிருகை யாலெடுத்துச்
சேராய் நினதடியிற் செவ்வேளே—நேராக
வந்தே னினதடிமை வன்னெஞ்ச னானாலுங்
கந்தா கருணைவைத்துக் கா. (௩)

காவாய் சதிரேசா காங்கேயா வென்முருகே
யேவாய் சுடர்வடிவே லென்றுயருக்—கோயாதிங்
கன்பதனை யார்ந்து னருண்ஞானச் சேவடியி
னின்பு கொடுத்தா ளினி. (௪)

இனியவள்ளி கேள்வா வெளியேன் படுந்துயரக்
துணியவுன் றன்றாமரைத்தாள் சார்ந்தே—னணிகொள்பரங்
குன்றத் தருளே குமர குருபரனே
யென்னைறக்கு மன்னுகவெற் கேர். (௫)

ஏரார் பரங்குன்றத் தெந்தையே நின்னடியிற்
சேரா ரிமையர்குறை தீர்ப்பதற்கா—நேராக
வேல்விடுத்த சீலா விசாகா சரவணத்திற்
கால்விடுத்த கண்ணேயிங் கன். (௬)

கண்ணே நவமணியே கற்கண்டே கண்ணிறைந்த
விண்ணே யமுதே விழுப்பொருளே—மண்ணுமுனி
பூசித்த தேவே புனங்காட்டும் புன்னகையை
யாசித்தேன் போக்கென் பவம். (௭)

பவமகற்றி யாள்வாய் பரங்குன்றத் தையா
வவமகல வந்தே னடியிணைக்கீழ்ச்—சிவமிலக
வைத்தென்னை நீங்காத மையல் றனையகற்றி
யத்தனே யீவா யருள். (௮)

அருள்வாய் பரங்குன்றத் தப்பா சரணங்
குருவே சரணங் குமாரா—விருசரணங்
கொண்டேன் சிரத்தினுயர் குன்றம் பிளந்தவேல்
கண்டேனா சரணமெனைக் கா (௯)

காவாழி கந்தன் கழல்போற்று மன்பர்தவச்
சீர்வாழி வாழி திருமறையோர்—நீர்வாழி
வள்ளிமருகை வேலனை பரங்குன்ற மன்னாபசு
விந்திலத்தோர் தாம்வாழி யே (௧0)

திருச்சிற்றம்பலம்.

ஆகச்செய்யுள் - உஉ.

---

## மூன்றாவது-கழுகுமலை.

திருச்சிற்றம்பலம்.

நேரிசைவெண்பா.

பூங்காரத் துட்பொருளே யொற்றை மருப்போனே
யாங்காரத் தைத்துடைத் தாதரிந்து—நீங்காத
நித்யசுக மீந்தெனையா ளீதன் கழுகுமலை
யத்தனையான் பாட வருள்.

வேறு.

சீரார்கழுகுமலைவாழறுமுகச்செல்வவுன்போ
லாராளுவார்களடியேனையாண்டருளன்னைவள்ளி
கார்வாழும்வேள்விமலைநாடிச்சென்றுகலந்தமணந்
தார்வாழ்புயத்தாசேசண்முகாசத்திதந்தருளே. (௧)

ஐயாநினதடியார்கட்கெல்லாமடியேனடியேன்
மெய்யாய்நினதடிவந்தடைந்தேன்வினைதன்னின்வந்த
பொய்யாம்பிரபஞ்சமாயையிம்மாயப்புழுக்குழியி
னையாதருள்புரிவாய்கழுகாசலநாயகனே. (௨)

வானோர்கடஞ்சிறைநீக்கவல்வேல்விடுத்தாய்வனத்திற்
கானோர்கள்கண்முன்கணிச்சியநாய்நின்றகந்தையனே
மோனோர்கள்வந்துநிதம்பூசைமுற்றுவணக்குவட்டுக்
கோனேயருள்புரிவாயடியேன்குறைநீத்தணைத்தே. (௩)

பாலேநிகர்மொழிமாதரைவேண்டிப்பணிசெய்துநான்
மாலேமொழிந்ததல்லாலடியேனன்மலர்கொடுன்றன்
காலேயர்ச்சித்துமகிழ்கொண்டுகேட்புனல்கண்டறியேன்
வேலேவிளங்குகையாகழுகாசலவேலவனே. (௪)

வேலாவடியர்வினைதீர்த்துமுத்திநல்வீடருளும்
பாலாமிடியருனைவேண்டிற்புத்திரம்பல்பொருளு
மாலாகிக்கொள்வர்வினையேன்சிறுபிழைநீவிலக்கி
மாலாகியவிருடீர்ப்பாயுன்மைந்தன்மகிழ்ந்திடவே. (௫)

வானாகிவானவர்நாமாகிமண்ணுமறைமுதலுந்
தேனாகிநின்றநற்பரனேயொன்றுசாற்றுவன்கேள்
தானாகியமொழிமானார்களின்பச்சிறுகுழியைப்
பேணாதருள்புரிவாய்கழுகாசலப்பேரின்பமே. (௬)

பேரின்பநீயன்றிவேறுமுண்டோவிந்தப்பேருலகிற்
கூரின்பமாயையிற்கூடியநோயுடற்கொண்டடியேன்

சிரின்பமின்றித்திரிந்தலைந்தேன்செல்வமேயெனைநீ
காரின்பமேகழுகாசலனேகரும்பேயழுதே. (எ)

கரும்பேயடியர்வினைதீர்க்கவெண்ணிக்கழுகுமலை
பெரும்பேர்சிறக்கவிருப்பாய்பிழைகளைத்தையுமோர்
துரும்பேயெனத்தள்ளியுன்னிருதாளின்றுணையைநித்தந்
தரும்போருடருவாய்சச்சிதானந்தசண்முகனே. (அ)

வேலாசரணம்விமலாசரணம்வினையகற்றுங்
காலாசரணங்கடம்பாசரணங்கழுகுமலைப்
பாலாசரணம்பரனேசரணம்பவமகற்றி
மேலானவின்பந்தருவாய்சரணமென்வேலவனே. (கூ)

கந்தாகழுகுமலைவாழிவாழிகதிர்வடிவே
லெந்தாயுனதிருசத்திவாழியெழிலுலகோர்
வந்தாதரவென்றடிபோற்றிவாழிவள்ளிதையுமை
மைந்தாவடியருமாமயில்சேவலும்வாழியவே. (கo)

திருச்சிற்றம்பலம்.

ஆகச்செய்யுள் - ௩௩.

---

## நான்காவது-சங்கரநாராயணர்கோயில்.

திருச்சிற்றம்பலம்.

ஐங்கரமூர்த்திபாதமன்பொடுபூசைசெய்து
சங்கரநாதராகித்தற்பரையாகிமாலாய்ப்
பொங்கரவணிந்துநின்றபுரிசடைப்பரனைநாயே
னங்கையின்மலர்கொண்டேத்தியருள்பெறப்பாடுவேனே

ஒங்காரத்துட்பொருளா யொளியாய்வாறு
யுண்மையதாயடியர்மனத் துறையுஞ்சோதி
யாங்காரத்தைத்துடைத்தேயடியேனுய்ய
வருடந்தபெருங்கருணை யார்தந்தாள்வார்
றீங்காரமிட்டளிகண் மொய்க்குங்கொன்றை
யிணையணிந்துசங்கரனார் கோயின்மேவித்
ஈங்கோலவருமடியார் தீங்குநீக்குந்
திருவுருவங்கண்டுதுயர் தீர்த்திட்டேனே (௧)

தீர்த்திட்டேனானுடலை வேறாய்ச்சோதித்
திருவுருவந்தெவிட்டாத வின்பமாகப்
பார்த்திட்டேன்பாசவினை பாழாய்ப்போகப்
பரனேநின்னுதல்விழியா லெரியக்கண்டே
னார்த்திட்டேன்மான்மழுவுமாடும்பாதத்
தணிகழலுங்கண்டடியே னன்பினாலே
வேர்த்திட்டேன்விமலாவுன் விந்தைதன்னை
யின்னவருமறிவரிது விமலமூர்த்தி. (௨)

மூர்த்தியாய்த்தேவருமாய் முனிவராகி
மூலமாய்மூவராய் நின்றவன்றன்
சீர்த்தியார்பாடவல்லார் தேவதேவா
தெளிந்தவர்கண்மொழிவதற்கு மரியசோதி

கார்த்திகேயனைப்பயந்த தேவரின்னருள்
கலந்தபெருங்கருணைவெள்ளம் பெற்றவுய்யே
பூர்த்தியாய்ப்பெறப்பணிந்தேன் மலர்கொண்டேத்திப்
பொற்பாதந்தனையடியேன் பூசித்தேனே. (௩)

பூசித்தேனரியயனுந் தேடிக்காணாப்
பொற்பாதந்தனைநாயேன் புகழ்ந்துபோற்றி
யாசித்தேனன்று புரமூன்றுஞ்சுட்ட
வழனகையையென்பாச வினைகள்வெந்து
தூசிக்கேநிகராகத் தொலைத்துவுன்றன்
றுங்கமலர்ப்பாதமதைத் துணையாய்த்தந்து
நேசித்தேயிருக்கவருள் புரிவாயெங்கு
நிறைவாகவுமையாக நின்றசோதீ. (௪)

சோதியாயருள்வடிவாய்த் துதியாய்ச்சொல்லாய்ச்
சுருதிமுதற்பலகலையாய்த் தொண்டராகி
நீதியாய்நீள்சடையோ னாகிநின்ற
நின்மலனேசங்கரனார் கோயின்மேவு
மாதியாயிலிங்கமுமாய் நடேசமூர்த்தி
யாகியருட்சத்தியொரு பாகமாகிப்
பாதியாயொன்றாகி நின்றவுன்னைப்
பங்கயத்தாளிம்மையிலே பணிந்திட்டேனே (௫)

பணிந்திட்டேன்பவவினைகள் பறந்ததின்றே
பரமனடியென்சிரத்திற் படிந்ததன்றே
துணிந்திட்டேனினியஞ்சேன் கமலபாதத்
துணையாகவெப்போதுந் தொண்டுசெய்வே

வணிந்திட்டேன்றிருநீறு மைந்தெழுத்து
மம்பலத்தினின்றாடு மமலன்றாட்கீழ்க்
குனிந்திட்டேன்சங்கரனார் கோலங்கொண்டேன்
குளிர்மதியம்புனைந்தபிரான் கொடுத்தபேறே. (௬)

பேறேயென்பெருவலியே யடியேனுன்னைப்
பிரியாமலிருந்திடநற் பேறுதந்த
கூறேநின்கருணைவெள்ளம் பெற்றுளோர்க்குக்
குறைவேதுவினைவேது கோலமேது
மாறேனின்மலர்ப்பதத்தைப் பூசைசெய்வேன்
மருள்வரினுமயிலோனை வாழ்த்திக்கொள்வே
னேறேநின்முடிசூடி யாடுஞ்சோதி
யற்புதமேயருமருந்தே யமுதேபொன்னே. (௭)

பொன்னேநற்புதுமலரே பூவேபூவிற்
பொருந்தியவெல்லாவுயிர்க்கும் பொறியாய்நின்ற
மின்னேயெனதுள்ளத்தில் வெளியாய்நிற்கும்
விரிசுடரேவிண்மணியே விருப்பமிகக
வன்னேயென்னப்பனே யன்பேயம்ப
ரகத்திலுறையற்புதமே யழகேவானோ
ரெங்கோரும்வணங்குங் கயிலைவாழ்வே
யேகனேயடியேனை யிரட்சிப்பாயே. (௮)

அடியேனுமன்னையுமாய்ப் பிதாவுமாகி
யறிவரியமுதலாகி யந்தமாகி
யிடியோனுமதுரையிலே யிறகுவிற்று
விருப்பமிக்கபாணனது வினையைத்தீர்த்துப்

படியோனும்மண்சுமந்து வடியும்பட்ட
 பசுபதியேபாதமலர் பணிந்தவிந்தக்
கொடியோனைப்பிறவாம லீக்கவந்த
 கோலமறைதமலர்தூவிக் கும்பிட்டேனே. (சு)

கும்பிட்டேனின்பாதம் போற்றிபோற்றி
 குஞ்சரனேநின்பாதம் போற்றிபோற்றி
நம்பிட்டேனினிப்பிறவி யறுத்தாய்போற்றி
 நம்பிரானின்பாதம் போற்றிபோற்றி
யம்பிட்டேனருள்சுரந்து வாண்டாய்போற்றி
 யம்பலத்திற்கூத்தாநின் னடிகள்போற்றி
வெம்பிட்டேயமுதமுகம் பார்த்தாய்போற்றி
 வெள்ளிமலையுடையானே போற்றிபோற்றி. (க0)

திருச்சிற்றம்பலம்.

ஆகச்-செய்யுள்-சுசு.

---

## ஐந்தாவது - தாருகாபுரம்

திருச்சிற்றம்பலம்.

மகாரவெழுத்தாகிந்திருமாலொடுநான்முகனு
யகாரவெழுத்தாகியருளம்பலத்தாடுகின்ற
சிகாரவெழுத்தானதில்லைத்தேசிகனின்றமுத
வுகாரவெழுத்தானவோங்காரனடியோற்றி. (க)

ஐயாநின்னடியேனைலங்கேதனைலநேருடலை
மெய்யாவெண்ணித்தீய்வினையேபலசெய்துழன்றேன்
பொய்யாமாயையெனைப் பொருந்தாமலருள்சுரந்து
கையாலேயணைப்பாய்கடனஞ்சுண்டகண்டத்தனே. (௨)

கண்ணேகண்மணியேகயிலைத்திருக்கற்பகமே
விண்ணேவிண்மணியேவினைதீர்த்தருள்வித்தகனே
யெண்ணேயென்வினைகளெரிந்தேகத்தழல்விழியாற்
றண்ணேநின்னடியேன்படும்பாடுநீபார்க்கலையோ. (௩)

பாராய்நான்முகனுய்ப்படிகீண்டியமாலாதி
யோராலுமுணராவுப்புறமாகியொன்றாய்ச்
சீராய்ச்செல்வமுமாய்த்திருச்சிற்றம்பலத்தினிற்கு
நோராய்நின்னையல்லானெறியார்தரவல்லாரே. (௪)

கண்டேநின்னகத்துட்கயற்கண்ணிதன்காதலனே
தொண்டேசெய்தறியேன்றுதிசெய்யத்தொடக்கறியே
னண்டேனுன்னையல்லானினியாரையுநோக்குழலே
னின்றேயென்வினைதீர்த்திருளேகப்பணித்தருளே. (௫)

தாராரும்புகழ்ச்சீர்த்திருத்தாருகனீள்புரத்துக்
காராரும்மலைசூழ்கழிக்கானிலுறைபவனே
வாரார்கொங்கைமலைமங்கையென்றுயுடனே
நேராய்வந்தடியேன்வினைநீக்கியருள்வாயே. (௬)

பொன்னேபுண்ணியனேபுரிநீள்சடைப்பூவண்ணனே
முன்னேமுப்புரமுமுடியச்சிலைதொட்டவனே

மின்னே மெய்ச்சுடரே மிளிர்கொன்றை புனைந்தவனே
யன்னே நின்னையல்லா லெனையாள்பவ ராரினியே. (எ)

பாடும்பரிசறியேன் பணிசெய்துன் பணிமலர்த்தாள்
டும்பரிசருள்வாய் தில்லைக்கூத்துடைக் கோமளமே
வாடும்பயிர் தழைக்கவந்த மழைபோல் யான்
றேடும்பதத்தை யென்றன் சென்னியில் வைப்பாயே. (அ

அத்தா நின்னடியெனருமாயையிலாழ மன்
முத்தா நின்னடியென் முடிமேல் வைத்தருள் புரிவாய்
சித்தா தேவர் தொழுந் திருந்தாருக நீள்புரத்து
நித்தா வுன்னையல்லா லினியாரை நினைக்கேனே. (௯)

பணிவேனன் மலர்கள் பறித்துற் பொடுவென் காத்தா
லணிவேனின் கழலிலினியாரையு நொந்துழலேன்
றுணிவேனின் னடியார் துதிசெய்யத் தொழும்புசெய்தே
தணிவேனின்னடிக்கே போற்றிசங்கர தாள்போற்றி. (க0)

திருச்சிற்றம்பலம்.

ஆகச்செய்யுள்—௫௪.

---

# ஆறாவது-திருப்பால்வண்ணநல்லூர்.

திருச்சிற்றம்பலம்.

செய்யசேமத் திருநிவாழ்க் கிடு.
மெய்யனார் தனைவேண்டுதல் செய்திடுங்
கையனன் கடையேனை யிங்காண்டிடு
மையனைமுகனருட் பாதமே. (க)

பாதமேதந்துபந்தமற்றுன்னடிப்
போதமேயருட்பூம்பொழிற்பாலவண்ணா
நாதவொப்பணையாடிருநாயகா
வேதுமற்றெனக்கீரடிதஞ்சமே. (உ)

தஞ்சமுன்னடித்தாமரையல்லது
வஞ்சலென்றினி யாள்பவராரெனை
நஞ்சுகண்டத்தடக்கியநாயகா
பஞ்சநீங்கிடப்பாரெனைப்பால்வண்ணா (ங)

பால்வண்ணாதிருப்பார்வதியோர்புற
மால்வண்ணாமறுமாயையைநீக்கிடுங்
கால்வண்ணாகடையேனுய்ந்திடுநெறி
கோல்வண்ணாகுளிர்கொன்றையந்தாமனே. (ச)

தாமனேதையலொப்பணையாடிரு
வாமனேவையம்வானாடுவானவா
காமனேயயன்கார்வண்ணனாகிய
வோமனேயெனக்குன்னருளீந்திடே. (ரு)

அருளுமாகியருமறைகண்டிடா
மருளுமாகிமறைமுதலாகிய
பொருளுமாகியபூரணபால்வண்ணா
விருளகற்றியிணையடிசூட்டிடே. (சு)

சூட்டுவாய்திருத்தொண்டர்குழாத்தினிற்
பூட்டுவாயருட்போதநெறிதந்து

கூடவோயுன்றன் கூத்துடைத்தாளினை
மாட்டுவாய்மலைமங்கைமணாளனே. (௭)

மங்கையொப்பனையாண்மணவாளனே
செங்கைமாலுந்திசைமுகனுந்தொடர்ந்
தெங்கணும்மறியாதவிணையடி
யங்கையாற்றொழுதேனருள்போற்றியே. (௮)

போற்றினேனுனதன்பொன்னடிபால்வரு
கூற்றினேருடல்கொண்டலைந்தேன்றுயர்
மாற்றினேனின்மலரடிகொண்டபி
னேற்றினேன்மயலம்பலத்தையனே. (௯)

ஐயனேயடியாரகத்தேயொளிர்
மெய்யனேயெழில்வெண்பிறைசூடிய
செய்யனேதிருப்பால்வண்ணையம்பதி
யுய்யவேயுலகோர்திருவாழியே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

ஆகச்செய்யுள்—௩௪.

---

# ஏழாவது - சிவகிரி.

திருச்சிற்றம்பலம்.

நந்தாவிளக்கனையாடிருநாதன்மருகோனாய்
மந்தாரமுதற்கூவிளமருமாமயிலோனாய்
சிந்தாகுலமெனைநீக்கிடுசிவனாய்ச்சிவகிரிமேல்
வந்தாய்மறைமுதல்வாரணவரனேகழல்போற்றி. (௧)

அந்தாதியுமில்லாவருள்வடிவாகியவமலா
சுந்தாசிவகிரிவாழ்கழல்கண்டேன்றுயர்விண்டேன்
பந்தாகியமுலையாள்பளைபாலாபசுபதியே
யெந்தாயெனையாள்வாயெனையாள்வாயெழில்வேலா. (௨)

வேலாதிரிசூலாவினைவேரற்றிடவேண்டுங்
காலாகடனஞ்சுண்டருள்கண்டாவருள்கொண்டாள்
பாலாபகல்வண்ணாபருப்பதஞ்சூழ்சிவகிரிவாழ்
கோலாமுறைகொண்டாள்குறைகொண்டாள்குருநாதா. (௩)

அருண்டாகாயவெளியாயருளொளியாயங்கங்கே
தெருண்டாடியமலையாளோடுசேருஞ்சிவனே
மருண்டாடியவடியார்வினைமாற்றுஞ்சிவகிரியாய்
வெருண்டாடியவெனக்குன்னருள்வேடாவருள்வேடா. (௪)

கண்ணுவரியரவத்துயில்கண்ணன்கடல்வண்ணன்
மண்ணுடியுமறியாமலரயனேடியுமறியா
வுண்ணுடலையார்கண்டிடவுடையார்மலைமேல்வா
ழண்ணுவடல்வினைதீர்த்தருளருள்வாயருடுருவாய். (௫)

அருளாயருளொளியாயரியயனுமருமறையாய்
மருளாய்மருள்போக்குமயிலோனையுமலைமேல்வாழ்
பொருளாய்ப்புலியோர்போற்றிடுபுனிதாவடிவேலா
விருளாகியமருளேகிடவெனையாளினியெனையாள். (௬)

ஆள்வாயளகேசற்கருளாளாகியதோளா
வாழ்வாய்வளைமாதுக்கொருமணியாகியவரதா
பேழ்வாயரவத்தேயுறைபெருமாடிருமருகா
மீள்வாய்சுரர்சிறைமீட்டருள்வேலாதிருவேடா. (௭)

திருமாமலர்செறிசோலைகடிக்கெங்குநெருங்க
மருமாமதுவுண்டேயளிவாழக்கிளிபாடக்
கருமாமயினடனம்புரிகழனிச்சிவகிரிவா
ழருமாதவவடிவேயருள்வடிவேதெருள்வடிவே. (௮)

வடிவேறியதிரிசூலமுமானும்மலைமகளும்
பொடியேறியதிருமேனியும்பொலியுஞ்சிவனேநின்
கடிதேறியமயிலுங்கதிர்வேலுங்கணிமாரும்
மிடிபாறிடவடியேன்றுயர்மீளத்தொழுதேனே. (௯)

பண்ணார்மொழியாண்மாதிடப்பங்காபலகலைக
ளெண்ணார்முனிவோர்தேடியுமெளிதாயறிவரிதா
பண்ணுமலையாய்நின்றிசிவருளேதிருவருளே
கண்ணுகழல்போற்றிகதிர்வேலாகழல்போற்றி. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

ஆகச்செய்யுள் - எ௪.

---

## எட்டாவது-தென்மலை.

திருச்சிற்றம்பலம்.

வண்டார்சோலைத்தென்மலைவாழும்வாதேசன்
றெண்டார்தோலைத்தொல்வினையேகச்சகமீந்து
கொண்டான்கோலக்கொம்பேரிடையாள்கொழுநன்றன்
பண்டார்கோலப்பரமனடிக்கேபணிவேனே (௧)

பணிவேனையாபார்வதிநேசாபால்வண்ணா
வணிவேனையாவழகுடைநீற்றையருளாகத்
துணிவேனையானவாதெழுத்தோதித்துரிசற்றுக்
கணிவேனையாகூற்றுதைதாட்கீழ்க்காவத்தா. (௨)

அத்தாபார்காலயனய்மாலாயனலாகிச்
சித்தாகாயவெளியாம்விமலாதென்மலையா
பத்தாபத்தரின்னலகற்றிப்பயநல்கு
முத்தாமுத்திக்களாசேர்த்தெனையாண்மூக்கண்ணா. (௩)

கன்றுகன்னனன்றங்கையமனையாய்க்கைக்கொண்ட
யன்றுவன்பரன்னையகத்தேயருள்செய்தாய்
வின்றுவின்னோர்வேண்டிடவேலன்றனையீந்தா
புன்றுமுலைபதியுன்னடிபோற்றியுய்ந்தேனே. (௪)

உய்ந்தேனுன்னைபூவுடமேபாடுவுட்கண்டே
னொந்தேனின்னுமின்னலகற்றநலிகின்றேன்
பைந்தேனூறும்பனிமலர்க்கொன்றைப்பால்வண்ணா
வெந்தேவின்னமேழையையாளவென்னையோ. (௫)

என்றையாவுமுன்னருளல்லாதிலையானா
பன்றுபாசப்பற்றறநீக்கும்பகல்போன்ற
வன்றுவன்கூவிளமலர்சொரிதென்மலைவாழு
மன்றுசிவபரிபூரணியம்பாளனைதோளா. (௬)

தோளாரரவந்தொல்புலியாடைச்சுரர்போற்றுந்
தாளாரரவந்தந்தெனையாடென்சகிலத்தா

வாளார்கண்ணிசிவைபரிபூரணிமகிழ்ந்தேத்து
மாளாவன்பர்க்கடியவனாகவருள்போதா. (எ)

போதாபொன்போலிலகுசடைப்பூவண்ணத்தா
காதார்சோதிக்குண்டலம்வழுவக்கனகத்தே
வாதாடியவுன்வண்கழலணிமாமலரொத்த
பாதாபாதந்தந்தெனையாளப்பாராயோ. (அ)

பாராய்நீராய்ப்பகலாயிரவாய்ப்பரமாய
நேராநின்னைநினைபவர்நிற்கண்டருள்செய்வா
ராராய்வாறோர்வண்சிறைநீக்கியவங்கண்ணா
வாராய்சரணங்கண்மணிசரணம்வந்தித்தேன். (கூ)

கண்டேன்பாசக்கட்டறுநீக்குங்கழல்போற்றிக்
கொண்டேன்கோலக்கூற்றுதைபாதக்குறிபோற்றி
நின்றேனடியேனீயோற்றுநிபலன்றாட்
கொண்டேவெளியேன்சொந்தமெனப்பெற்றுய்ந்தேனே. (க0)

திருச்சிற்றம்பலம்.

ஆகச்செய்யுள் - அச.

---

## ஒன்பதாவது-தேவதானம்.

திருச்சிற்றம்பலம்.

அத்தனேயகாரமாகியருள்வெளியாகிநின்ற
சித்தனேதேவதானச்செல்வமேதேவர்போற்று
முத்தனேமூவானமுக்கணையமுகத்துக்
கத்தனேகடையேனுய்யக்கம்பலபொற்பாதங்காட்டே. (க)

செய்யனேதேவதானச்செல்வனேதெளிந்துளோர்க்கண்
மெய்யனேமேருவில்லாவிடவராநாணதாகப்
பொய்யினோர்புரங்கடிந்தம்புண்ணியர்க்கருளீந்தாண்ட
ஐயனேயடியேனுய்யவருளறிவருளுவாயே. (௨)

கண்ணனேரேனமாகிக்கமலத்தோனனமாகி
யண்ணலேயறியவொண்ணா வருட்டிருக்கோலந்தன்னை
மண்ணுளேபுழுக்கூடேற்றமதியிலேனறிந்துபோற்ற
விண்ணுளேயுருவமாகிவிடையின்மேல்வருவாய்போற்றி. (௩)

போற்றினோர்க்கருளுமாகிப்புவியுளோர்குருவுமாகிக்
கூற்றினேர்பெண்ணுமாகிக்குலவியவாணுமாகி
யேற்றினேர்கொடியனாகியிலங்கிடுந்தேவதேவா
காற்றினேர்பஞ்சுக்கொட்பாய்க்கடிந்திடென்கவலைதானே. (௪)

உன்னருளுற்றதொண்டர்க்குறுதொழிலேவலாளா
யின்னலற்றன்னப்பிச்சையெடுத்தமுதூட்டிவைத்தாய்
பின்னையாருநீயும்விடையிசைவந்துமாயப்
பின்னலேநீக்கியின்றேபேரின்பம்நல்குவாயே. (௫)

வண்டுநேர்குழலாளொன்றாய்வரைமகடனைப்பாகத்திற்
கொண்டுசேர்வந்தேயென்றன்குறைகளைத்தீர்த்தாளீசா
பண்டுநேரடியார்கொண்டபதமடியேனுங்கொண்டு
தொண்டுசேர்புரியவுன்றன்றுணைப்பதங்காட்டுவாயே. (௬)

வரனுயர்மலைகள்சூழ்ந்துவளர்தேவதானமேவும்
பரனுவேயனையசோதிப்பராபராவடியேன்கண்முன்

மானுடன்மழுவுமற் றங்கைகளுங்கொண்டென்றாயுந்
தானுமேவந்துடாலன்றழைத்திடவருள்செய்வாயே. (எ)

அன்னைநீயப்பனீயென்னகமதிலறிவாய்நிற்கு
மின்னுநீவிருப்புநீயென்விவேகமுநீயேயாகு
மின்னலீநீக்காயானுலெளியன்வேறுரைநோவேன்
கன்னல்சூழ்தேவதானக்கடவுளேகருணைகூரோ (அ)

கயிலைவாழ்கன்னேபோற்றிசருமணிக்கண்டாபோற்றி
மயிலையாள்வேலாபோற்றிமலரயனாய்போற்றி
யயிலைநேர்விழியாளம்மையானதும்நீயேபோற்றி
குயிலைநேருமையைப்பாகங்கொண்டவுன்கோலம்போற்றி. (௯

சோதியேவாழிவாழிசொற்புவியோர்கள்வாழி
யாதியேவாழிவாழியந்தமிழ்மறையோர்வாழி
நீதியேவாழிவாழிநின்னடியவர்கள்வாழி
வாதியாதென்னையுன்றாளிணைவைத்தருள்வாழிவாழி. (௧௦)

திருச்சிற்றம்பலம்

ஆகச்செய்யுள் - ௯௪.

---

## பத்தாவது ஷ தேவதானம்.

திச்சிற்றம்பலம்.

நன்மலர்கள்சொரிகாவினனிமயிலாட
நறவங்களுண்டளிகணற்கிதம்பாட
பொன்மலர்கள்சொரிந்தேத்திப்புலவர்புகழ்பாடப்
பூவையர்களிருபுறமும்பொலிகவரிவீச

தென்மலையிலருண்முனிவர்சேர்ந்துபதம்போற்றுஞ்
சேறைநகர்வாழீசர்தேவியிடமாக்கி
யென்மயல்கடீர்த்தருளவாகுமிசையேறி
யேரம்பர்வருவாரென்றேத்துசிறுகுயிலே. (க)

மின்னைநிகர்வாழ்வதனைவிரும்பியதனாலே
மெலிந்துதிரிந்தலைந்தவென்னைமீட்டருளையீயக்
கன்னல்செறிகழனிதனிற்கருங்குவளைமலர்ந்து
கடைமாதர்கண்கடமைக்கண்டுநகைசெய்ய
வின்னலறிந்திவர்விழிகளிழிபுனலின்மூழ்க
விதையுணராக்குருகினங்களினைகளனைத்தாவுந்
தென்னைசெறிசேறைநகர்த்தேவர்விடையேறித்
தேவியுடன்சேர்வாரென்றேத்துசிறுகுயிலே. (உ)

அன்னமதிலுறையயனுயரியாகியனலா
யண்டமுதற்பிண்டமுமாயம்பலத்தினின்று
தென்னதெனவென்றாடுந்தில்லைநடராசர்
திருத்தொண்டர்க்கருள்புரியுஞ்செய்யதிருச்சோதி
யென்னதெனுமகங்காரத்திடையழுந்தினோர்கட்
கெட்டாதவெம்பெருமானென்னையாளுமீசர்
வன்னமலைசேர்சேறையம்பதியிற்செல்வர்
வாழவருடருவாரென்றேத்துசிறுகுயிலே. (௩)

அண்டமதிலுறைதேவர்க்கருள்புரியவெண்ணி
யணிமயிலிலுகந்தேறுமாறுமுகனாகி
கொண்டவுணர்குலமாளக்கூர்வடிவேலெறிட்ட
கோலமதையன்போடுகூறினதினாலே

தொண்டர்களிலொருவனெனத்தூக்கியருளீந்த
    தூமதியஞ்சூடிபிரான்றொல்பிறவிநீக்க
வண்டணையுமலர்க்குழலாள்வரைமாதினுடனே
    வருவார்நலெருதிலெனவாழ்த்துசிறுகுயிலே. (௮)

சின்னவிடையன்னநடைத்தேவியொருபாகஞ்
    சீவர்தொழுபூதியணிமேனியொருபாக
மன்னநடைமாதரிசைபாடுமொருபாக
    மருமுனிவர்போற்றிசெயுமருண்மொழியொர்பாகங்
கன்னவிடைமுத்துதிருங்கழனிசெறிசேறைக்
    கடவுளெனையாள்வதற்குக்கண்டதிருக்கோலம்
வன்னநடைமாடேறிமங்கையுடனாக
    வருவாரென்றேவரிசைவாழ்த்துசிறுகுயிலே. (௯)

தொண்டர்திருவகத்திலொளிர்சோதிவடிவாகித்
    தோற்றியருண்ஞானவிழிசொந்தமுடனீந்து
வண்டர்முதன்முனிவர்களுமறிவரியமுதலா
    யண்பர்தமக்கேவல்புரிந்தாண்டருளுமையன்
வண்டர்தனைப்பிறவிதனில்வந்துழலவைப்போன்
    வரைமாதையிடப்பாகம்வைத்துமகிழ்கொண்டோன்
றெண்டனிடுமடியேனையாளவிடையேறித்
    தேவியுடன்சேர்வாரென்றேத்துசிறுகுயிலே. (௰)

மாயனெயிறேனமதாமலர்ப்பிரமனனமாய்
    மாறுருவங்கொண்டுமறியாதமறைப்பதத்தோன்
சேயெனவுந்தாயெனவுஞ்சென்றுலகமெங்குந்
    தேடரியமுதலாகிச்சேறைநகர்வாழ்வோன்

காயெனவுங்கனியெனவுங்கருவெனவுமுலகிற்
    கற்பிதமாய்நின்றிலங்குங்கடவுளெனையாள
வாயுவினுங்கதியுடையவன்னவிடையேறி
    வந்தாரென்றேவரிசைவாழ்த்துசிறுகுயிலே. (ஏ)

தேனுலவுமாலையணிதேவர்தினந்தொண்டு
    செய்யும்வடிவேலவர்திருக்கருணைகொண்டு
வானுலவுசோலைகளின்மந்திகுழனூத
    மாங்கனியையுண்டுமகிழ்வானரங்களாடப்
பானுலவுமாகுவடுபன்பாகச்சூழ்ந்த
    பரிசுடையசேறைநகர்ப்பரமனடியுற்றே
னேனுலவுகொண்டாயென்றெனையாளுமீச
    ரிடபமிசைவருவாரென்றேத்துசிறுகுயிலே. (அ)

ஓங்காரத்துருவாகியுள்வட்டமாகி
    யொருசோதியாகியதிலோருருவமாகி
யாங்காரந்தனையகற்றியருள்சுரக்கவள்ள
    லன்புடனேயெனையாளவருட்கோலங்கொண்டு
றீங்காரமிட்டளிகண்மொய்க்குமலரணிந்தே
    யெம்மன்னையிடமாகவிடபமதிலேறி
வர்ங்காதவனுபூதிவந்தெனக்குமீய
    வந்தாரென்றேவரிசைவாழ்த்துசிறுகுயிலே. (கூ)

ஐயனடிவாழியருள்வாழியரிவாழி
    யங்கமலத்துறையயனுமந்தணரும்வாழி
மெய்யனடிவாழிமிகுதொண்டரடிவாழி
    மேதினியினுறைபவரும்வேந்தர்களும்வாழி

செய்யதிருமகள்வாழிதேவர்களும்வாழி
சேறையம்பதிவாழிசெல்வியுமைவாழி
மையலறுத்தெனையாண்டமயிலோனும்வாழி
வாதவரெனையாண்டாரென்றிசைக்குமடிவாழி.

திருச்சிற்றம்பலம்.

ஆகச்செய்யுள் - க0ச.

---

## பதினொன்றாவது- சேத்தூர்.

திருச்சிற்றம்பலம்.

ஐயாவோங்காரத்தொளியாயரனையரியாயயனை
அய்யாவுலகமனைத்திலுக்குந்தோற்றுங்கதிரோன்றனுகிச்
செய்யாளுறையுஞ்சேத்தூரிற்சிவனேயானைத்திருவதன
மெய்யாவடியேன்கடைத்தேறவெளியாயெனைவந்தாள்வாயே.

வண்டார்குழலாள்வளைமாதை வாமத்திருப்பாற்கொண்டரு ளித், தொண்டார்தொண்டர்க்கருள்புரியந் தோற்றுஞ்செல்வ திருவடிவே, செல்டாரிடபந்தனிலேறிச் சேத்தூர்நகரத்தவர் களிக்கப், பண்டார்பாசந்தனைநீக்கிப் பரனேயெனையிங்காளா யோ. (உ)

வானோரிடுக்கண்டனைநீக்க வடிவேன்முருகன்றனையுய், ம னோற்றிடுபூசைக்கிரங்கிமலர்ப்பாதத்திற்சேர்த்தாண்டாய், தே னூற்றிடுசெஞ்செழுஞ்சோலைச் சேத்தூருறையும்பெருஞ்சோதி, யானேற்றிடுபூசைக்கிரங்கியடியேன்றனையிங்காளாயோ. (ஙு

அன்பாயுன்னையருச்சித்தவரியபசுவுக்கருளீந்தாய்
முன்பாவுன்னைமுறைசெய்தமுனிவர்தனக்குக்குருவானு
யென்பாயிருந்தபெண்ணுருவையெழுந்துபோற்றும்படிசெய்தா
யின்பாய்ச்சேத்தூர்வாழ்சிவனேயெளியேன்றனையிங்காளாயோ

கல்லிற்கட்டிக்கடலில்விட்டகருணைத்திருநாவுக்கரசி
னல்லைத்தொலைத்துக்கரையீதுவடைவேயடைவித்தருளீந்தாய்
தில்லைத்தலத்திலொருபெண்ணைச்சேர்ந்தமூகைதீர்த்தாண்டா
யில்லைப்பிறவியுனக்கென்றிங்கெளியேன்றனைநீயாளாயோ. (௫)

முன்னாளிறந்தவொருகுழந்தைமுதலைவாயாற்றருவித்தாய்
பின்னாளரவாலிறந்தபிள்ளைபிழைக்கும்படிசெய்தருளீந்தா
யெந்நாளினுமுன்றொண்டர்படுமிடுக்கண்டீர்ந்தேயின்புற்று
ரன்னையப்பாசேத்தூரிலரசேயெனையிங்காளாயோ. (௬)

பண்டோர்தொண்டர்பசியாற்றப்பகலிற்றிரிந்துசெருத்தோறும்
தொண்டாயன்னந்தனையிரந்துசுகனேபசிநோய்தீர்த்தாண்டா
யண்டார்புரங்களழனகையாலழியநகைத்தேயருளீந்தாய்
கண்டாயடியேன்படுந்துயரங்கண்டேயெனையிங்காளாயோ (௭)

செய்யாசூலப்படையானேதிகழும்புலித்தோலுடையானே
யையாவரவந்தரித்தோனேபாசக்கிளைகள்பறித்தெனையாள்
மையார்விழியாளுமைபங்காமாசொன்றும்வந்தடையாமே
யையாசேதூர்தனில்வாழுமமலாவெனையிங்காளாயோ. (௮)

மோனமுனிவர்தம்மகத்துமொழியாவொளியாய்நிறைசோதி
வானமுழுதுந்தானுமியங்குங்கதிராய்நிறைசோதி
யேனவுருவாயரிபிரமனெனுய்த்தேடற்கருஞ்சோதி
மானமுழுதுந்துறந்திட்டேன்வாவாவெனவந்தாள்சோதி. (௯)

ஒன்றாய்ப்பலவாமுருவானவொளியேயுனதுதாள்போற்றி
சென்டாயிலகுந்திருத்தனத்துச்செய்யவழகிதாள்போற்றி
தொண்டாயடிக்கேதொண்டுசெய்யுந்துய்யவடியாரடிபோற்றி
நின்றேனடியேன்றனைச்சேர்த்தார்நிமலாவிரங்கியாளாயோ (கo)

திருச்சிற்றம்பலம்

ஆகச்செய்யுள் - ககச

---

# பன்னிரண்டாவது-திருச்சதுரகிரி

திருச்சிற்றம்பலம்.

அருமுனிவோர்தொழுமங்குசுபாசமணிந்தமுதே
வருமுனிவோர்தொழுமாணிக்கமானமகாலிங்கமே
திருமுனிவோர்தொழுந்தில்லையிலாடுந்திருவமுதே
குருமுனியாய்வந்தருள்புரிவாய்குறைகொண்டனைத்தே. (க)

மையலகற்றிமலர்ப்பதந்தந்தெனைவாழ்வித்திடுந்
தையலிடப்பக்கந்தங்கச்சதுரகிரிதனிலே
செய்யசிவலிங்கமாளுஞ்செயலின்றிநின்றவென்னை
யுய்யவருடந்தவுன்னையருச்சித்துவோதுவனே. (உ)

வந்தேனினைந்துனையென்றேநினைந்துவழியிலரு
டந்தேயநன்பின்றனாரவைத்தாய்சிவசங்கரனே
யந்தோநினைத்துவருந்துகின்றேனருள்செய்யுமுன்னை
கொந்தேனுனையன்றிவேறார்துணையருளேறெக்கிடவே. (ந)

எல்லாவுலகமுமெல்லாவுயிர்களுமானவரு
ளெல்லாயடியவன்பொல்லாதநாய்தனக்குங்கடையேன்

கல்லாதவனருணில்லாதவன்கைப்பொருள்களொன்று
மில்லாதவென்றனையேன்படைத்தாயருளீந்திடே. (௪)

வானோர்கள்வந்துதினம்பூசைசெய்யும்வரைதனிலே
கானோர்கள்பூசிக்கநின்றகன்றோகடையேனுமுன்னைத்
தானேயுளத்திலிருத்தியருச்சிக்கச்சார்ந்தவறி
வேனோகலைத்துவிட்டாயடியேற்கருளீசுரனே. (௫)

கலைத்தாலுமுன்னைப்பிரியவிடேன்கடம்பன்மலர்த்தாட்
பலத்தானற்பூசைபடித்துக்கொள்வேனெம்பிரானெனையூ
ழலைத்தாலுமுன்றன்கழற்கேயருச்சித்துவன்புகொள்வே
னுலைத்தாலுமுள்ளமுனக்கேயுடையதுடையவனே. (௬)

என்னைப்பிடித்தசனியனென்னுள்ளறிவாயிருக்கு
முன்னைப்பிடிக்கவலியுளதோவுமையாள்கணவா
மன்னைப்பிடித்தெனையுண்டாக்கியவயன்வைத்தவிதி
சின்னப்படச்சிதைப்பாய்திருமாமலைத்திவண்ணனே. (௭)

ஈதாயிதுவும்பொன்றாகாதாவென்றுவெடுத்தகவி
வாகாமுடியுமுன்வைத்தகருணைமறந்தனையோ
வேகாவெளியேன்றனக்குவருள்சுரந்திடுவா
யோகாசதுரகிரிவாழ் மகாலிங்கலோகத்தனே. (௮)

வில்லாலடித்தவன்றன்னையும்மிக்கவெகுளியுடன்
கல்லாலெறிந்தவன்றன்னையுங்காற்செருப்பாலுதைத்த
வல்லானையுமுன்வழித்தொண்டுகொண்டமகாலிங்கனே
பொல்லாதவென்னையுமுன்னடிப்போதிற்பொருத்துவையே. ()

கல்லாயுனதுதிருவடியல்லதுநானிலத்திற்
சொல்லாய்சுகந்தருவாருமுண்டோசுகனேபசிநோ
யில்லாதவாழ்வுநல்லின்பமுந்தந்துன்னிணையடியி
னில்லாயெனவருள்வாய்நின்மலாகிழனீயெனக்கே. (௧௦)

ஐயாசதுரகிரிவாழிவாழியதிலுறையுஞ்
செய்யாவுனதுதிருத்தொண்டர்வாழி திருமறையோர்
மெய்யாதருமம்வியன்வானந்தேவர்நல்வேந்தர்மறை
துய்யாசுகம்பெறவாழி சுகம்பெறவாழியவே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

ஆகச்செய்யுள் - ௧௨௪.

---

## பதின்மூன்றாவது-தென்கடம்பவனம்.

### வெண்பாவந்தாதி.

திருச்சிற்றம்பலம்.

அத்திமுனி காசியிற்சென் றங்கமெலா நெக்குருகப்
பத்தியுடன்கங்கை பணிந்தேத்திச்-சித்திபெறக்
கொண்டுவந்து நீராட்டிக் கோலமிட்டுப் பூசைசெய்த
கண்டுமொழி யானைமுகன் காப்பு. (௧)

அப்பா சயிலப்பா வன்பர்க் கருள்புரியு
மொப்பரிய தேவா வுனதடிமை-செப்புதல்கேள்
பாசமதி லாழாமற் பங்கயனே றுன்னடியை
வாசமதா யென்சிரத்தில் வை. (௨)

வைத்தாய் மலர்ப்பதத்தை வானுடோர் தாமறிய
வுய்த்தா யடியேனை யுன்னடிக்கே—சித்திபெறப்
பாடும் பரிசளித்தாய் பைங்கடம்ப மாநகரத்
தாடும் பராபரனே யாள். (௩)

ஆள்வாயமுதே யரனேநினதடியேன்
றாழ்வான பொய்க்கூட்டிற் சாராம-னேராக
வுன்பதத்திற் சேர்ப்பா யுமையாண் மனோகரனே
துன்பமதைத் தீர்த்தருளிச் சொல். (௪)

சொல்லேல சுடரே சுருதியயன் றேவர்முத
லெல்லோர்க்கு மெட்டாத வின்பனே-வல்லிருளில்
வந்தெனக்குக் காட்சிதந்து வாவென் றருள்சாந்த
சுந்தரனே பாதமலர் சூட்டு. (௫)

சூட்டுவாய் நின்கருணை தொண்டரடி யென்சிரத்தின்
மாட்டுவாயேறி மங்கையுடன்-பாட்டுடையோர்
தன்னெறியிற் கூத்தாடுந் தற்பரனே யென்னகத்து
ளின்னலதைத் தீர்த்தா ளினி. (௬)

இனிய கடம்பவனத் தெந்தையே பாசந்
துணிய வருள் சாந்த தாயார்-பரமகலி
யாணி மனோகரனே யத்திமுனி பூசைசெய்த
காணிதனில் வாழ்வோனே கா. (௭)

காரோங்கு தென்கடம்பக் காவி லமர்ந்தருளுஞ்
சீரோங்கு செல்வியிடஞ் சேர்த்தோனே-நீரோங்கு
மெர்த்தனுக்கு விப்பிறவி யிற்றுயரந் தானீங்க
வந்தருடா மாமணியே வா. (௮)

வாவா சதாசிவனே யம்பனே நீடேற
வோவாக் கருணைவைத் தும்பர்புகல்-பாவலர்கள்
வந்துகவி பாடவருள் வைக்கலையோ வென்றனையும்
பந்தமதி லாழாமற் பார். (௧0)

பார்வாழி வாழி பருப்பதஞ்சார் தென்சயிலக்
கார்வாழி வாழி கடம்பவனத்—தோர்வாழி
யையனடி யார்வாழி யம்பலத்தே கூத்தாடுஞ்
செய்ய மலர்த்தாள்வாழி சேர். (௧0)

திருச்சிற்றம்பலம்.

ஆகச்செய்யுள் - ௧௱௩.

## பதிநான்காவது-மதுரை

திருச்சிற்றம்பலம்.

ரூபனையருட்கையனைதிருவானைமாமுகமெய்யனை, செய்ய
கண்ணனைதிருக்கூடலம்பதிச் செல்வனைகயற்கண்ணியோர், கைய
னைகருநீலமாமணிக்கண்டனைகழல்போற்றிடும், பொய்யினை
யுடல்கொண்டவென்னைப்பொருந்துவாயருட்போதனே. (௧)

விட்டுநல்லதுநல்லதென்று விதற்றியுண்டநற்பிஞ்ஞகா, கொ
ட்டுநல்லதுகூடைகொண்டமண்ணென்றுகூறியகோல்வலோர்,
திட்டுநல்லதுநல்லதென்று திருத்திகழ்ந்துயர் கொன்றைசூழ்,
கட்டுநல்லதுவென்றுநீண்முடிசாய்த்தவாவெனைக்காக்கவா. ()

யோகனையருள்போகனையுயிர் தோறுநல்லறிவாகிய
பாகனைபரலோகனைபரை பங்கனாகியவங்கனை
மோகனையெழின்மதுரையம்பதி யீசனையெதிரானவென்
றுகனையடியேன்றனக்கருளாருவாயருளாருவாய். (௨)

அருளுமாயருளொளியுமாயரு மறையுமாயரியயனுமாய்ப் [ந்திய
பொருளுமாய்ப்பொருண்முடிவுமாய்ப் புவிபுனலுமாகிப்பொரு
விருளுமாயிருடன்னைநீக்கிடு மீசனேமதுரேசனே
மருளுமாமயில்பங்கனேமகிழ்மைந்தனுக்கருளிங்கனே. (௪)

சோதியேதிருநீதியேயருஞ்சொக்கலிங்கமதாகிய
வாதியேயருமறைகடேடுமண்ணலேயருளம்மையோர்
பாதியேயடியேன்படுந்துயர்பார்த்துநீயருளாயெனி
னீதியேயினியாரைவேண்டுவனின்னையல்லதமலனே. (௫)

மந்திரிக்கருள்செய்துமாறடிவாங்கிறைய்திருமதுரையாள்
சுந்தரிக்கருள்செய்துமாமுலைசுருக்கிவேட்டனைசுந்தரா
வந்தரிக்குமெனக்குவந்தருளையனேதிருமெய்யனே
கந்தரிக்குமுனக்குமீதொருகடமையென்றருள்கடவுளே. (௬)

அன்னைநீயெனதப்பனீயருளையனீயெனையாட்கொள
வுன்னைநீயொருவடிவமாக்கியுகந்துவந்தடிகாட்டுவாய்
முன்னைநீயொருவடிவமாய்மறைமுனிவருக்கருள்செய்தனை
பின்னைநீயலதாரெனக்குயிர்பேசரும்பெருமுதல்வனே. (௭)

அன்னமாமெனநன்னடைச்சிலையழகுமாதர்களாடிட
வன்னமாமயிலேறிவேலவர்வாசலின்புடைமேவிட
கின்னரஞ்சல்லரிமுழவமேமுதற்சேர்ந்தசிரொலிசெய்திட
மன்னனுமெனமதுரையாண்டிடும்வள்ளலேயருள்வள்ளலே. ()

அன்றுமுப்புரமழலில்வெந்திடவரியபுன்னகைசெய்தனை
சென்றுபிட்டினையுண்டுநீர்கரைசேர்ந்திடாதுமண்பெய்தனை
கன்றுகொண்டுவிளவெறிந்திடுகண்ணனன்மைத்துனனவா
கன்றுநன்றினியென்னையாண்டருளுதனேயருளுதனே. (௯)

சத்தனேசகலோகனேசுரர்சூழ்ந்துபோற்றுநற்சோதியே
பத்தனேயருமறைகள்பாடிமெண்ணலேயருளாளனே
சித்தனேசிவலோகனேமனுஞ்சீர்செறிந்திடுங்கூடல்வாழ்
கத்தனேநினைவேண்டினேனின்றிருக்கருணைவைத்தருள்வாழியே.

திருச்சிற்றம்பலம்.

ஆகச்செய்யுள் - ௧௪௪.

---

## பதினைந்தாவது-ஸ்ரீ மதுரை.

திருச்சிற்றம்பலம்.

ஈசாமதுரேசாவன்பரிதயத்துறைந்தாளு
நேசாநெடுமாறேடிடுநிமலாகயமுகனுய்ப்
பாசாங்குசமேந்திக்கரிமுகனைப்படிசாய்த்தாய்
தேசாவடியேனுய்த்திடச்சிந்திவாயே. (௧)

மன்றுமதுரேசன்மகள்வரைமாமுலைமான்றி
லன்றேயொருமுலைமாறிடவருளித்தவடன்னை
யன்றாயகியெனவேண்டினையொளியேதிருவெளியே
யென்றாயகவேளைமுக்கருளீவாயருளீவாய். (௨)

கயற்கண்ணியென்றாயாடனைக்கதிர்மாமணஞ்செய்யக்
கயற்கண்ணியைக்கையேந்தியகரும்பேயருளுருப்பே
கயல்கண்டிடுதுவசன்முறைகண்டேயவன்கூனை
யயல்கண்டிடவைத்தாயடியேனுய்ந்திடவைத்தாள். (௩)

அன்னையமுதேயென்றழுமம்மாதிடர்நீக்கப்
பொன்னாகியசடைமேலொருபொலிகூடையுமேந்தித்
தென்னாதெனவென்றாடியதேவாவன்பர்தாதா
வென்னாளினியென்னையாள்வதெனிறையேதமிழ்க்கிறையே. (௪)

முத்தாதிருமதுரைப்பதிமுதல்வாமறைமுனிவோர்
கத்தாகருணையப்பரியாக்குங்கவிக்கடலே
பத்தாவன்பர்தனையாண்டிடப்பரியூர்ந்தனைபரனே
யத்தாவடியேனுய்ந்திடவருளீந்திடுவரனே. (௫)

பொன்னாகியமேனித்திருப்போதாபொழின்மதுரை
மின்னாகியமீனாட்சியைமேவுத்திரடோளா
வுன்னாடலையார்கண்டிடவுடையாருலகாளு
மென்னாடலையுன்னோடுறவாக்காயெனதமுதே. (௬)

நித்தாவரியரவப்பணிவிமலாநிமிர்சடைமேற்
கொத்தாகியகொன்றைகுளிர்மதியம்புனைகோலா
சித்தாதிருமதுரைப்பதிச்செல்வாசெழுந்தேனே
கத்தாதடைநாயேற்கருள்காட்டாயருணாட்டாய். (௭)

பார்ப்பாயருபரனேபரைபங்காபகல்வண்ணா
காப்பாயருட்கண்ணாகலைதனையேந்தியகையா
தீர்ப்பாயடியேன்றீவினைதீர்த்துன்னருளாக
மார்ப்பாயினியடியேனுடலரனேயுனதையா. (௮)

பாடும்பரிசறிவேன்பணிசெய்துன்பணிமலர்த்தாள்
கூடும்பரிசருள்வாய்குயிற்குரலாள்வலப்பங்கா

வாடிப்படிவையாதினிவந்தேயருடந்தே
தேடும்பரமீவாய்திருத்தேவாதிருத்தேவா. (௯)

ஓங்காரமுமானாயுருவானாய்வெளியானா
யாங்காரமுமானாயருளானாயொளியானாய்
தேங்காயகிளநீர்சேர்ந்திடுசெயல்போலொளிர்சிவனே
வாங்காததிருப்பூதியைவந்தியடிபோற்றி. (௧௦)

திருச்சிற்றம்பலம்

ஆகச்செய்யுள் - ௧௫௪.

---

## பதினாறாவது-ஸ்ரீ மதுரை.

திருச்சிற்றம்பலம்.

செந்தேனொழுகுந்திகழ்சோலைதிசைசூழ்மதுரைமீனாட்சி
யெந்தாய்தன்னையான்பாடவிசையாயருளவாய்கணபதியே
பந்தேயனையநனவல்லவைபங்காநாளக்கொய்போனே
வந்தேனுனதுநாள்போற்றிவரையாதெனக்கிங்கிரங்கிடினே, ()

அம்மாமதுரைமீனாட்சியமுதேயருளேயருமருந்தே
யிம்மாநிலத்தையீன்றவளேயேகாந்தத்திலிருப்பவளே
செம்மானோக்கிவலப்பாகத்திகழுந்திருவேசெழுந்தேனே
கைம்மாறில்லாப்பெருங்கருணைக்குருபேவிரும்பிக்காப்பாயே.

காப்பாய்கயற்கண்ணோக்கத்தாற் கனமார்மதுரைத்தலைவாழ்
பார்ப்பாய்பாசவினைபோகப்பரமன்பங்கிலுறைவாழ்வே (வே
னேர்ப்பாய்ஞானவிழிதன்னைநெறியாயெனக்கீந்தருள்வாழ்வே
தீர்ப்பாயடியேன்றனைச்சீர்சேர்செய்யதிருத்தாள்சேர்த்தானே

ஆங்கேமாயையயக்காலேயனைக்கும்மக்களிருபேரு
மெங்கேசணைவன்பிதாவென்றுவேங்கித்தவித்துவிரங்கியழு
விங்கேயெனதுதாயென்றுவேத்தியுனையான்போற்றிடவுன்
பங்கேயிருக்கும்பரமனுக்குமினக்குமென்றேயராமுகமே (௪)

எல்லாவுலகுமானவனீயேகண்டங்கிலுறைபவனீ
நல்லோர்மனத்தினடிப்பவனீநானென்றவர்க்குமறைபவனீ
பொல்லாவினைகளறுப்பவனீபுகழ்மாமதுரையாண்டவனீ
செல்வாயசெல்வந்தருபவனீதேவியெனைவந்தாள்வாயே. (௫)

திங்கட்சடையோன்றிருச்சோதி திசைவாழ்மதுரைத்துரைச்
சோதி, யெங்குந்தானாய்நிறைசோதி யெல்லாவுயிர்க்குமெழிற்
சோதி, சங்குல்பகலாயவிர்சோதிகயிலைமலையான்கதிர்ச்சோதி,
மங்குமதியைமாற்றியென்னைவாழ்வித்திடவாவாசோதி. (௬)

சோதியாகிச்சுடராகிச்சொல்லிடங்காப்பூரணமா
யாதியாகியநாதியுமாயறிவுக்கறிவாய்நின்றிலங்கு
நீதியாகிநெறியாளாய்நீதாயென்றுநிற்குமென்னை
வாதியாமலருளம்பாவளர்மாமதுரைமன்னன்மணியே (௭)

அன்றுசவுணியர்க்கிரங்கியருளானைத்தருணப்பா
லொன்றுபடைப்பொன்வள்ளத்தாலூட்டியாண்டவென்றாயே
நன்றுபடருநாளெனக்குநல்வழியைக்காட்டியருள்
குன்றுபடநேர்கோபுரஞ்சூழ்கூடல்வாழுங்கோமணியே (௮)

அன்னேநீயுமப்பனுமென்னகத்திற்றயவைரயகற்றியருள் (யோ
முன்னேநால்வர்க்கிரங்கிமுறைமுறையாயடிமை கொள்ளவே

பின்னையாரையாண்டணிவேன்பெறுமெனக்குத்தரவல்லார்
பின்னோரழகுமீனம்மாவெளியாயெளியேன்றனக்கருளே. (௯)

அருளேபோற்றியகிலமெல்லாமானாய்போற்றியருமதுரைத்
திருவேபோற்றிஇசையெங்குஞ்செயருஞ்செய்தாண்டசீர்போற்றி
யிருளேயகற்றியெனையாளவிசைவாய்போற்றியெவ்வுயிர்க்குங்
கருவேபோற்றிதற்பரமேகயற்கண்ணேணுக்காற்காப்பாயே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

ஆகச் செய்யுள் — ௧௬௪.

---

## பதினேழாவது - திருவாப்பூர்.

திருச்சிற்றம்பலம்.

வளர்மாமதியையணிந்தவனைவைகைக்கரையிலிருப்பவனை
தழல்போனிறத்துத்தயாபரனைத்தையலிடத்தாயமர்ந்தவனை
கழலார்தண்டைகலகலெனுங்கயமாமுகத்துக்கரும்பேயோர்
நிழலாரெனக்குநீநல்லநெறியேயருளாப்புடையானே. (௧)

தளிர்சூழிளமாமலர்சொரியுந்தண்காவுறையுமெம்பரனே
யொளிர்கூரிளமாமயிலோனையுதவித்தேவருடனே
குளிர்சூர்ந்திடநல்லருள்புரிந்தகோவேயிடபக்கொடியானே
களிகூர்ந்திடநற்கருணைசெய்துகாப்பாய்திருவாப்புடையானே.

கொங்கேதனலங்கேதனிழலென்றுநோக்காவுன்னையறிந்துதொழ
வந்தேனினதுமலர்ப்பதத்தில்வைத்தாள்வரதாவழகுடைய
பந்தேயனையமுலையம்மைபங்காபாசமகற்றியரு
டந்தேயுனைநான்பிரியாதநிலைமைதாவாப்புடையானே. (௩)

ஈசாமாசுதீர்த்தெனையாளேகாவெங்குமொளியான
வாசாபாசமகற்றியெனைவந்தாளினியுஞ்சொந்தாளாய்ப்
பாசாங்குசனைப்பெற்றபெருப்பானேபாவவிமோசனனே
யாசாவன்பர்க்கருள்புரியுமரசேயழகாப்புடையானே. (௪)

அந்தோவெல்லாந்தானனவடபாவமுதேயருட்கடலே
நைந்தேயழுதுநான்கூவ நல்லமொழியுந்திருச்செவியி
லெந்தேவின்னமேற்கலையோவெளியேன்றனையாளீசுரனே
செந்தேனொழுகுஞ்செழுஞ்சோலைச் செல்வாதிருவாப்புடையா
(னே

பொன்னுள்ளத்திற்பொருந்துமரிபோற்றுப் புலித்தோலுடையானே, யென்னுள்ளத்திலிருந்தருளி யிடையின்மறைந்துவெனைவருத்தா, தன்னுள்ளத்திற்கனிந்தவருளோட்டியொளியவுன் திருத்தாள், வன்னுள்ளத்திற்பொருந்தியினி வந்தாடிருவாப்புடையானே. (௬)

எல்லாவுலகுந்தானனவீசாவெளியேன்மயக்காலே (மே
பொல்லாவினைகள்புரிந்திருந்தாற் பொறுப்பதிறைக்குக் கடனே
கல்லாலினிழிருந்து மறைசாணமுனிவர்தனக்குரைத்த
நல்லாயின்னைகற்றியருளுந்தாசல்லாப்புடையானே. (௭)

பண்டேவினைகள்பலபுரிந்து பாசவலைக்குள்ளாளாகிக்
கொண்டேனலை நரிவ்வுடலைக்கூத்தாவெல்லாம்நீயென்று
நின்றேறனிலையினிற்கவருணிமலாநிமிர்செஞ்சடையோனே
கண்டேயனையமொழியம்பாள்கணவாவருளாப்புடையானே.

கருணைக்கரசேகற்பகமேசனகசடையிற்காசியிற்பொ
ன்னருணைப்பதிசீர்காளத்தியானைக்காவாழ்காஞ்சிமுதன்

மருணைந்தகலுந்தலங்கடொறுமருந்தாயிருக்குமருந்தவனே
பொருணைந்திரக்கவையாமறபொலிவாய்த்திருவாப்புடையானே.

மருந்தேயமரர்பெருவிருந்தேமானின்விழியாளிடப்பாக
விருந்தேயருளவிடபமிசையேறியெனைவந்தாள்வாயே
பருந்தேவர்க்குவிடாகலவவுணர்குழாத்தைவேரறுத்த
பெருந்தேனூறும்பெருங்கருணைப்பேறேவாழிபிரான்வாழி (௫௦)

திருச்சிற்றம்பலம்.

ஆகச்செய்யுள் - ௧௭௪.

---

## பதினெட்டாவது-திருப்பூவணம்.

திருச்சிற்றம்பலம்.

தேவர்சூழ்ந்தடிபோற்றிடுந்திருப்பூவணத்துறைசெல்வனே
யாவர்தாழ்ந்தடிபோற்றினுந்திசையாளுவாரிதுதிண்ணமே
யேவலாயடியேன்படித்திடவெண்ணினேனிசைக்கேயருட்
காவலாயடியேகொடுத்தருள்கயமுகத்துணைக்கடவுளே. (௧)

தெங்குவாழ்ந்திடுசீர்பெறுந்திருப்பூவணத்துறைசெய்யனே
யெங்குவாழ்ந்திடவாரைநோக்கிடவேழையேற்கருணீயுநின்
பங்கில்வாழ்ந்திடுதாயுமல்லதுபாரிலவேறெனக்கார்துணை
தங்குமோரிடமில்லைநின்னடிசாத்தியாடிருப்பூவணா. (௨)

உன்னைநோக்குவனுன்னிடத்தொளிருமையைநோக்குவனல்ல
பின்னைநோக்குவதாரையாரருட்பெறுநர்திடவல்லரு (து
மென்னைநோக்கிடவேசெயுந்துயரேகவொன்னியவிடமே
லன்னையோடுறவாகிவந்தெனையாளுவாயருட்பூவணா. (௩)

பெருசீர்கானப்பேரூறையும்பிரானேயடியேன்பெறும்பேறே
மறுசீரடியேனினிவேண்டேன் மலர்த்தாளினிற்சேர்த்தாள்வா
[யே.

ஆணாண்பெண்ணலிலுமாயனலாய்ச்சயிலமாகியுயர்
வானாயரியாய்மதியுமாய்வானினிறைந்தவுடுக்களுமாய்த்
தானாய்வெளியாயொளியானசாம்பசிவனேசங்கரனே
கோனாய்நாயேன்பிழைபொறுத்துக்கொள்வாயகானப்பேரூரா.

அன்பாய்ஞானம்பெறமுன்னாளிகதவஞ்செய்யகத்தியற்கு
முன்பாய்ச்சோதிவடிவாகிமூர்த்தியாகியருளீந்த
வென்பாய்மாலையணிமார்பாவேகாகானப்பேரூரா
வின்பாயோதியுனைப்பணியவீவாய்கருணைவாழ்வாயே. (௫)

தேவர்பூசித்தருள்பெற்றார்தேவாநினதுசந்நிதிமுன்
பாவர்யாசித்தருட்பார்த்தப்படிந்துபோற்றிப்பவந்தீர்ந்தார்
யாவருபாசித்துனைப்பணிந்துவரும்பேரின்பமடையாதார்
தாவுவாசியுடையேறித்தருவாயருள்காளூரானே. (௬)

பொன்னாள்வாலிசில்லியமைப்புகன்றபழிப்பாற்பெறுசாபம்
முன்னூடரச்செய்தவள்பேர்முறைசேர்தீர்த்தந்தனைக்கீந்தா(வே
யென்னாலேகப்படுமோவுன் னெழில்சேர்வடிவை யென்றேற
யுன்னாலாக்கப்படவருள்வாயுடையாய்கானப்பேரூரா. (௭)

வீரசேனபாண்டியற்காவித்துருமத்தாலானபொய்மை
தீரமாணசேயாகச்செய்தாய்தீர்த்தமகத்துவத்தா
வீரமானபிறையணிந்தவெழில்சேர்சடையாபெருமானே
டாரமானவெனதுவினைபறிப்பாயருளைக்குறிப்பாயே. (௮)

திருவேதேவேந்திரன்சாபந்தீர்த்தாய்தேவர்சிறைநீக்க
யுருவேயொளிசேர் சண்முகனையுகந்தாய்புழைக்கையுருசாப
மருவேயழித்தாய்காளைப்பேரன்பேகானையற்புதமே (கே
குருவேயடியேன்குறைதீர்த்துக் கொள்வாயுனதன் குளாகழற்

சிரனேவாழிகாளைப்பேர்ச்செல்வாவாழிசீர்மறையோ
ரரனேவாழிஞானக்கூத்தவருள்சேர்முனிவர்தாம்வாழி
பரனேவாழிபாரினுயிர்பண்பாய்வாழிபலகலையும்
வரனேவாழிவானுலகுமடியார்குழாமுடவாழியவே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

ஆகச்செய்யுள்-௧௯௪.

---

## இருபதாவது - திருவாடானை.

திருச்சிற்றம்பலம்

திருவளர்சோலைசிறந்திடு திருவாடானைவாழ்செல்வனேசிவனே
யருள்வளர்வாலையணைந்திடுதோளாவாலவாயம்பலக்கூத்தா
மருவளர்மாலைமலர்ந்திடுமார்பாமாலறியாப்பதம்பாடிக்
கருவளருழைக்கடந்திடவலவைகாதலன்மலர்ப்பதங்காட்டும்(௧

ஐயனேயுலகபனைத்திலுமானவட்பனேயருளுடையமூர்த்தி
செய்யனேயுனதுதிருமலர்ப்பாதந்தெரிந்துபூசனைபுரிந்துய்ய
மெய்யனேயெனதுமெய்யினிலறிவைவிரித்தருட்கோலத்தைவி
ளக்கியுய்யநேருதவியொளிவளர் திருவாடானைவாழொருதனிமு
தலே. (௨)

அன்னையென்னுடையாளம்பிகைசிவகாமவல்லிவாழுமொருபா
கா, முன்னமென்னையாண்டருளூழ்வலியையுமப்புறப்படுத்த
தூ[illegible]னே, நின்னையின்னதாய்ச்சிறைநீக்கிடவழித்துன் றிருவடி
சிரமிசைசூட்டி, யின்னமின்னமுமிப்பாகமென்றனைவந்தெய்தி
டாதிருள்வீசா. (௩)

உம்பர்கட்கரசேபன்னடித்தொண்டர்க்குறுதுணையியலாதுள
தோ, செம்பொருட்கடலேதிருவடியல்லாற்றிக்குவேறில்லையெ
ன்சிவனே, வம்பெனப்பழுத்தென்னூழ்பறந்தோடவைத்துமின்
னருளினைவளர்த்து, வெம்பொருட்டுன்னையேயத்திடவருளாடா
னைவாழெம்பெருமானே. (௪)

பண்ணினிலிசைந்தமாவிடவுருவை வகுத்தயன்வனைந்தமுன்னை
மூத்தைக், கண்ணினுங்காணுதோடநின்கருணைக்கதிரவன்றன்னை
யெதிர்காட்டிப், பண்ணினுஞ்சிறந்தமொழியுடைப்பரவை பங்
கநின்பனிமலர்ப்பாத, முன்னிநான்பூசைபுரிந்திடவருளாடா
னைவாழொருதனிமுதலே. (௫)

அத்தனேயன்பேயகத்தினிலுதய மாகியவமுதமேயருளே,
சித்தனேசிவனேதேவனேதிருவாடானைவாழ்சிநேகவல்லியின்
மா, பத்தனோநாயேன்பயின்றுயர்களைந்துன்பாதமென்சிரசினில்
வைத்துக், மத்தனேகருணைதந்தடியேனைக்காத்திடுவென்னடிமை
யாய்க்கண்ணே. (௬)

கண்ணினுண்மணியேகனியினுள்ரசமேகற்பகதருவினன்மல
ரே, பண்ணினுண்மொழியேயாரெலாமான பரிதியேயலகிலே
மறைக, ளெண்ணினுமறியாவின்பமேயென்னுளேகவேற்றிய

ருவளக்கே, விண்ணினுண்ணொளியேவிருப்பமேதிருவாடா னைவாழ்விரிசடையோனே. (அ)

பண்டுநின்னடியார்படுந்துயர்நீக்கிப்பாதமீந்தருளியபரனே, கன்றுதேன்மொழியாள்கலந்திடுபாகாசடுக்கையங்கண்ணியாரப ர்பா, தொண்டுசெய்தடியேன்றனித்திடவுனதுதூயமலர்ப்பாத மென்சிரசிற், கொண்டுவெண்மயிலைக்குறைத்திடாடானைக்கூடு றுறைமேகோலமாமணியே (௯)

ஆலமேயமுதமாகவுண்டவப்பனேயொப்பிலாமணியே, ஞால மேஞாலமேலோமோரியாகிநள்ளிருள்போக்கிடும்விளக்கே, சீல மேசிவர்தன்னையாண்டருஞ்செல்வமேசிவபெருமானே, யே ழைமேயென்னையாண்டருள்புரிவாயோகனேயெம்பெருமானே.

சீர்பெறுதிருவாடானையார்வாழிதேவர்கண்முனிவர்கள்வாழி, பார்பெறுசிநேகவல்லியென்றுயாள் பணிமலர்ப்பாதமும்வாழி, நேர்பெறுமடியார்மறையவர்வாழிநீள்சுடர்வேலவர்வாழி, பேர் பெறுமானைமுகப்பெருமானும்பேருலகனைத்தும்வாழியவே. ()

திருச்சிற்றம்பலம்

ஆகச்செய்யுள் - ௨0௪.

---

## இருபத்தோராவது - இராமேசுரம்.

திருச்சிற்றம்பலம்.

சீராய்ச்செல்வமுமாய்த்திருவானைமுகனுக்கி
நேராய்நின்மலனாய்நிறைமாமதிவேணியனை
யாராயுமறிவாயதற்கப்புறமாகியொன்றாய்ப்
பேராவிராமலிங்காவருளாளனையுப்பேணேனே. (௧)

கண்ணேயேழுலகாயதிற்கண்டிடுமண்டங்களாய்ப்
பெண்ணையாணாகியதிற்பேசிடுநல்லுயிராய்
மண்ணாய்நீராகிச்சுடர்வன்னியுமாகிநின்ற
யென்னைப்ராமலிங்காவருளாரையுமேத்தேனே. (௨)

செய்யாபொற்குவடைச்சிலையாகவளைத்தவனீ
பையாராடரவைப்பணியாகப்புனைந்தவனீ
கையாரானையுரிகலையாகப்புனைந்தவனீ
மையாராமலிங்காவருளாரையும்போற்றேனே. (௩)

கந்தமலர்க்குழலாள்கலைமாமகளையகனைச்
சிந்தைவருந்தமுறத்திருவேலர்சிறையிலிட
வந்தச்சிறைநீக்கியருளீந்தனைராமலிங்கா
வுந்தன்மலரடியேதுணையாரையுமோதேனே. (௪)

திருவேதெள்ளமுதேதிகழ்சேதுவெனுந்தீர்த்தக்
கருவேகற்பகமேகயற்கண்ணிநற்காதலனே
யருவேயம்பலத்தேயருளாகநடிப்பவனே
குருவேராமலிங்காவருளாரையுங்கூடேனே. (௫)

பொன்னேயெவ்வுலகும்பொலிவாகியபேரொளியாய்
முன்னாய்முக்குணமாய்மும்மூர்த்தியுமாகிநின்ற
யென்னேநீர்க்கரிதோவெருதேறிடுமெம்பரனே
யன்னாய்ராமலிங்காவருளாரையும்போற்றேனே. (௬)

பத்தர்களேத்தினமுப்பலனெய்தத்திருக்காசி
யுத்தமகங்கைகொணர்ந்துன்முடியிற்சொரிந்து
சித்தமகன்போநின்சேவடிபோற்றியுய்வா
ரத்தனேராமலிங்காவருளாரையுமேத்தேனே. (௭)

அன்பேயென்னமுதேயரிராமனுனைப்பணிந்து
வின்பேபெற்றுயர்ந்தானெழிலைக்குழலிபங்கா
துன்பேபட்டுநொந்தேன் சுகமீந்து - ணையாவா
யுன்போலிராமலிங்காவினியாரையுமோதேனே. (௯)

வேலன்றனையீந்துதேவர்வெவ்வினைநீக்கலையோ
காலன்றனைக்காய்ந்துமார்க்கண்டனைக்காக்கலையோ
பாவன்படுந்துயரந்தேவர்பார்க்கப்பறந்திடுமே
யாலந்தனையமுதாயுண்டவப்பனேராமலிங்கா. (௰)

அண்டர்புகழ்ந்தேத்துமருள்ராமலிங்கம்வாழி
தொண்டர்குழாம்வாழிசுகதீர்த்தங்களும்வாழி
வண்டனையுங்குழலாளுமைமாதுபாதம்வாழி
தண்டையொலித்திடுந்தாடிருச்சண்முகனேவாழி. (௧௦)

திருச்சிற்றம்பலம்

ஆகச்செய்யுள்- உ௧௪.

---

## இருபத்திரண்டாவது - தேவகோட்டை

### கு. இராமசுவாமிச்செட்டியார்க்குவந்த

### நோய்நீங்கப்பாடியது

திருச்சிற்றம்பலம்.

கற்பகக்கொழுந்தேகதிரொளிவிளக்கே கயமுகத்தவுணனைக் காய்ந்த, வற்புதமணியேயரிதிருமருகா வானைமாமுகமுடையரசே, சிற்பரயோகசிவசிதம்பரத்திற்றிருநடஞ்செய்திடுஞ்சிவனே, பொற்புடன்பாடிப் போற்றிநானவேண்டும் பொருள்பெறக் கருணைகூர்ந்தருளே. (௧)

பொன்னினம்பலத்திற்பொருநடம் புரியும்புண்ணியா புலியத
ளுடுத்தாய், வன்னியும்புனலும்மதியமுமணிந்தாய் வானவர்க்
காகநஞ்சுண்டாய், யுன்னிலுஞ்சிறந்த துணையுமொன்றுண்டோ
ஊழ்வினைபோக்கிடுமருந்தே, கன்னியோர்பாகா ராமன்கோயி
நிரக்கருணைகூர்ந்தடியனுக்கருளே. (உ)

உன்மலர்ப்பாதமுறுதுணையையா வுலகினிலொருதுணையிலை,
யின்னமிப்பாசமெந்தனைச்சேராதெய்ப்பிரான்கருணையாலகற்றி,
முன்னையூழ்வலியைக்குறைத்திராமன்றேய் முழுவதுமாற்றி
யுன்னடியேன், றன்னையாண்டருடாதற்பரா தில்லைத்தாண்ட
வாதையமேலோர்பாகா. (௩)

சோதியேயுலகினுன்னையல்லாதுதொழுந்தெய்வமொன்று
ளதோ, நீதியேவினையைநீக்கியாண்டருளும் நின்மலாசென்னி
மேற்கங்கை, யாதியேமதியங்கொன்றையும்புனைந்தாயன்பர்க
ளறிவினிலமரும், வாதியேராமசாமிநோயறவென்றனக்கருள்
புரிவாயே. (௪)

வண்டுமொய்குழலாள்வளையகளென்றாய் மகிழ்ந்திடவலமி
டமிருந்தாய், பண்டுநின்னடியார்வினைகளைத்தீர்த்தாய்பாவையா
றாதுபோய்மகிழ்ந்தா, யண்டவாயலைத்தவாலமுண்டத்த
ணிந்தனையம்பலத்தரசே, தொண்டனைநருத்தாதவன்பிணிபோ
க்கிச்சுகங்கொடுத்தடியனுக்கருளே. (௫)

அப்பனேதில்லையருளொளிவிளக்கே யன்றுமுப்புரம்பொடி
செய்தாய், செப்புநேர்முலையாள் ரூனைகதீர்த்தவன்சொற்செ
யம்பெறப்புத்ரரைவென்று, யிட்டபொழுதியான்போற்றிமொ
ழிக்கிரங்கியிவன்பிணிமுழுவதுமாற்றி, யொப்புநேரில்லாவுமை
யொருபாகா வுன்னடியெனக்கருள்வாயே. (௬)

கன்னல்வின் மதனைக்கண்ணினாற்காய்ந்தாய்கனல்படமுப்பு
ரநகைத்தாய், பொன்னுலகத்தோர்புகழ்பெறவவுணர்பொன்
றிடமுருகனைப்பயந்தா, யென்மனந்தன்னையின்புறவைப்பதெங்
ஙனேயுமக்கரிதாமோ, வன்னையோர்பாகாவிவன்பிணிதீர்த்து
ன்னடியனுக்கருடருவாயே, (எ)

வன்னியுங்குளிரமதியமுங்குளிரவானிலத்தவர்களுங்குளிரச்
சென்னிமேற்கங்கைபுனைந்தவாவெங்குஞ் செயம்பெறத்திருவ
ளர்கோயிற், பொன்னினம்பலத்திற்பொதுநடம்புரியும்புண்ணி
யாவென்மனங்குளிர, விங்கிலத்தவருங்குளிர்ந்திடவிவனோயே
யிடவருள்புரிவாயே. (அ)

அருந்தவரிதயங்கோவிலாக்கொள்ளுமமுதனேயவனியினல்ல,
மருந்துமந்திரமாய்மாசுதீர்த்தருளி மரகதமாதுடன்விடைமே,
லிருந்துநின்னடியாரின்புறவருவா யிப்பிணிநீக்குவதரிதோ, கு
ருந்தமாநிழலிலிருந்தமாமணியேகூத்தனேகருணைகூர்வாயே. ()

ஐயனேயிவனோயகன்றிடவிந்த வம்புவியனைத்துமைந்தெ
ழுந்து, முய்யவேயுனதுதிருவருள்சிறந்து வோங்கநின்னடிய
வர்கூட்டம், மெய்யனேயுனதுமெல்லடிவிரும்பி விரிந்தநன்
மலர்கொடர்ச்சித்துச், செய்யனேசிறந்ததிருவடிபோதிற்சேர்ந்
திடவருள்புரிவாயே. (க௦)

எந்தையேயுனதுகிருபையாலிவனோயெளிதினிலாற்றிடவென
து, சிந்தையேமகிழவிரணியமீந்து திருவருளுலகினிற்சிறக்க

தந்தையேதாயேசரணமென்சிரத்திற்சாத்திேனடியனுக்கிரங்கிப், பந்தபாசத்தைவிலக்கிநின்பாதபங்கயந்தந்தருள்போற்றி

திருச்சிற்றம்பலம்.

ஆகச்செய்யுள் - உகரு.

## இருபத்துமூன்றாவது - திருவாரூர்.

திருச்சிற்றம்பலம்.

திருவளராரூர்ச்செல்வனேயானைத் திருமுகமுடையவென்கோவே, யருள்வளர்மலர்த்தாளன்பொடுபோடியருச்சனைபுரிந்துறுனய்ந்து, பெருவளம்பெற்றுப்பேருலகனைத்தும்பேசிடப்பேரறிவுற்றுக், குருவருட்பாதங்கூடிடவருள்வாய் குறைகழற்கணுநிலைம்போற்றி. (க)

தந்தைநீதாய்நீசதாசிவாவடியேன் றயங்கிடாதின்னலைமாற்று, மெந்தைநீயல்லாலென்னுயிர்த்தலைவா வென்னையார்காத்திடவல்லார், சிந்தைநீவருந்தாதிருவெனவடியேன் சீர்பெறத்திருவருள்சிறந்து, கந்தநின்மலர்த்தாள்கலந்திடக்கமலைக்கடவுளேயருள்புரிவாயே. (உ)

மங்கையோர்பாகாமணத்திருக்கொன்றை மலர்ந்திடும்மாமுடிதனினற், கங்கையுங்கனின்சேர்திங்களுமபுனைந்தகண்ணுதற்கடவுளேயாரூ, ரெங்களுயகனேயின்னிசைபாட விலங்கையாண்டவன்றனைக்காத்தாய், செங்களுடரவப்பூண்புனைந்தாடுந்தியாகனேகருணைகூர்வாயே. (ங)

சீர்செறிதிருவாரூரில்வாழ்தியாகா திருவிடைமேலுகந்தேறி
னேர்செறிந்தடியார்தனக்கருள்செய்யும் நின்மலாவென்பிறைவா
னே, தார்செறிந்திலங்குந்தண்ணருள்மார்பா தையலையிடமுடை
யோனே, பேர்செறிந்திலங்கும்பேரின்பவீட்டின் பேறெனக்
கருள்புரிவாயே. (௪)

பொற்புறுதிருவாரூரிலுள்ளவரும் பொன்னகர்த்தேவரும்
போற்றக், கற்புறுதேவியுடன்விடையேறிக் கன்றையுமரசன்
காளையையு, மற்புறவெழுப்பிநல்லருளீந்த வையனேநாயினேன்
போற்று. மற்புதவடிவேயடைக்கலம்புகுந்தே னையகோத்த
ருள்வாயே. (௫)

பொன்னவிர்சடையார்புண்ணியாவாரூர்ப் பொற்புறுகோவி
லிற்பொலியும், மன்னவாதியாகாமனோன்மணிபங்காமாதவத்
தவர்களைமயக்குங், கன்னல்வின்மதனைக்கண்ணினாற்காய்ந்தகட
வுளேகழலடிபோற்று,மென்னையுன்பாதத்தேற்றருள்புரிவாயெ
ங்குமாகியதிருவொளியே, (௬)

செங்கிருநாதன்றிருவருள்பெற்றுச் சீர்பெறப்பூசித்ததேவா,
சுந்தரர்க்காகத்தூதுபோய்மீட்ட சுந்தராசுரர்தினைப்போற்று,
மைந்தருவெட்கக்கருணையையருளு மையனேயடிமலர்போற்
று, மெந்தனையுலகமாயையால்விலக்கி யுன்னடிக்கேற்றருள்வா
யே, (௭)

செய்யனேதிருவாரூரில்வாழ்செல்வத்தியாகராசாவுனதருளா
லுய்யனேருநவுமொருவனீள்பாதத் தூற்றிடவிரும்பினேனெனி

சே, ரையனேயடியேனவனியிலிருக்குமளவுமுன்னடியிணைபோ
ற்றுங், கையனாயிருந்துகருணைசேர்பாதங் கலந்திடக்கருணைகூர்
வாயே. (அ)

கருணையேயுருவமாகியமுதல்வா காசிகாளாஸ்திரிகாஞ்சி
யருணைபோர்சிறந்தவம்பலமானைக் காசமூக்குன்றநன்மதுரை
பெருமையேசிறந்தபேசருமரியதலமெலாமிருக்குமெய்பிரானே
திருவையேபொருந்திச்சீருடனிருந்துன் றிருவடிசேர்ந்திடவரு
(ளே.

உலகெலாம்நிறைந்துமொளியதாய்ச்சிறந்துமுயிர்க்குயிரான
வாபோற்றி, இலநவாணுநலாளப்பிகைபாகஞ்சேர்ந்திடவிருந்
தவாபோற்றி, பலதலந்தோறுமிருந்தருள்செய்யும்பராபராபத
மலர்போற்றி, கலைவளராரூர்க்கணைந்தவரடிக்குங் கலின்கொள்
சீரடியர்க்கும்போற்றி (க0)

வாழிநான்மறைகள்வானவர்வாழிமறையவரனுதினம்வாழி
வாழியாலினங்கள்வாழிநற்றொண்டர்மலர்தருந்தருக்களும்வாழி
வாழியேழுலகுமவாழிசீர்தருமமழைதரும்வானமும்வாழி
வாழியாரூருமழவிடையேறுமாதவன்நாமமும்வாழி. (கக)

திருச்சிற்றம்பலம்.

ஆகசெய்யுள் - உஉகூ.

---

# இருபத்துநான்காவது-வயித்தீசுரன்கோயில்

திருச்சிற்றம்பலம்.

சீர்செறியானைத்திருமுகச்செல்வா திருவருள்சிறந்திடுபுள்
ளூர்ப், பேர்செறிந்திலங்குபிஞ்ஞகாவென்னைப் பெற்றவாபேச

ற்கரிய, வார்செறிகொங்கைமங்கையைவலத்தில் வைத்தவா வானவர்சாற்றுந், தார்செறிமலர்கடரித்திடுமோர்பாதமியனுக்கரு ள்புரிவாயே. (௧)

அப்பனேநின்னையன்புடன்பாடியருச்சனைசெய்திடவிரும்பிச் செப்பினேனிதனைத்திருவருளாலே சிறந்துமிச்செகமெலாம்வி ளங்க, வொப்புநேரில்லாவுன்மலரடியையுளமகிழ்ந்தனுதினம் போற்றித், துப்புநேரிதழ்வாய்த் தோகையோர்பாகா சுகம் பெறக்கருணைகூர்வாயே. (௨)

அன்பனேயன்பேயுருவமாயன்பாருச்சனைபுரிமலரோற்கு, மி ன்பனேயின்பந்தருந்திருப்பாதாவேழையேன்றனக்குமெய்வுயி ர்க்கும், முன்பனேமுன்னோர்முப்புரந்தன்னைமுறுவலாற்பொடி படச்செய்த, வன்பனேவன்னச்சிறகுறுபுள்ளூர்வயித்திலிங் கேசனேயருளே. (௩)

திருவளர்புள்ளூர்ச்செல்வனேதிருமாறேடியுமறியொணாப்பா தப், பெருவளம்வேண்டிப்பின்றொடர்ந்தேனுன்பிள்ளைநானல்ல வாபிதாவே, யொருவளந்தனையுமுலகினில்வேண்டேனுயிர்க்கு யிராகியவுறவே, கருவினுறுழைக்கழற்றினின்றுளிற்கலந்திடக் கருணைகூர்வாயே. (௪)

செய்யனேபுள்ளூர்ச்சிவபெருமானே செய்வதொன்றறிகிலா ச்சிறியே, னுய்யனேருதவியுன்மலர்ப்பாதவுறவுதந்துன்னிடஞ் சேர்க்கும், மெய்யனேயிந்தவூனுடலுடனே மேவிமெளவுநின் னருளே, பெய்யனானதுபெரும்பதம்போற்றிப் பேறுறக்கரு ணைகூர்வாயே. (௫)

அளவிடற்கரியவெளியெலாநிறைந்த வப்பனேயன்பர்களறிவிற், புளகிதங்கொள்ளவுருவமாய்ப்பொலியும் போதனேபுள்ளூறை வேளூர், மழவிடையேறு மகிழ்நனேசெவ்வாய் மகிழ்ந்திட நோய்தவிர்த்தாண்ட, வழகனேயடியேனடைக்கலம்புகுந்தே னன்புவைத்தருள்புரிவாயே. (௬)

அரியயன்முதலாமமரராயுலகமனைத்துமாய்நிறைந்தவெ ன்னையா, நரியினைப்பரியாய்ப்பாண்டியற்கீந்த ஞநின்பெருமை யாரறிவார், கரியுரிபோர்த்தகாளகண்டாநின்கழலடிசேர்ந்துற விரும்பி, வரிகொள்சிறகுப்புள்ளூவாளூரில்வந்தனனிதறிந்த ருளே. (௭)

தையலைப்பாகந்தனில்வைத்தாண்டாய்சண்முகனைவந்த மா, துய்யவெவ்வவுணருரத்தினைச்சிதைத்தாயுன்றிருவருளையா ரறிவார், கையினுலுனதுகழலடிபோற்றக் கருத்தறியாததோர் சிறுவன், செய்யுநோதியேன்றிருப்புள்ளூருடையசெல்வனே கருணைகூர்வாயே. (௮)

மலரயன்முதலோர்தேவர்கடினமு மகிழ்ந்தருச்சனைபுரிந்தே த்துந், தலைவநின்றாளிற்சரண்புகுமடியேன் றழைத்திடத்தன் னளிகூர்ந்து, கலைவளர்மதியமென்னநல்லறிவு கலந்திடக்கரு ணையைப்பெய்து, நிலைபெறநின்றாணிழலினில்வைத்தா ணிரு தனைப்பொருதபுள்ளூரா. (௯)

என்னுயிர்க்குயிரேயினியென்னசொல்லியேற்றுவேன்றிருவ டிபோற்றி, அன்னமென்னடையாள்தையலுமையதன்னழகியவடி.

யிணைபோற்றி, முன்னமோர்கொம்பைமுரித்தெழுதியநன்முக்கனென்கழலிணைபோற்றி, வன்னகீளிறகுவளர்மயிலேறும்வரதனுக்கனுதினம்போற்றி. (கo)

அந்தணர்மிக்கவருந்தவத்தோர்களானினமரசர்கள்வாழி, பைந்தருவனையவறத்தினர்பான்மைதருந் திருப்பழமறைவாழி கந்தனீண்மலர்கொண்டானடிபோற்றுங் கையினராலுதினம்வாழி, யிந்தனூல்படித்தோர்கேட்டுளோரெழில்கூர்ந்தெம்பிரானடிபெறுவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

ஆகச்செய்யுள் -உகஎ.

---

# இருபத்தைந்தாவது-சிதம்பரம்.

திருச்சிற்றம்பலம்.

அருட்குமையாவானைமாமுகவாவம்பலத்தாடுமேரசே
வெருட்டனைத்தீர்த்துவினைதனைத்தறித்துமெல்லடிதந்திடுமமுதே
மருட்டனைத்தீர்க்கவகையறியாமன்மயங்கினேன்மாதவமருந்தே
யிருட்டனையகற்றுஞ்சோதியேயட்பாயிரங்கியாண்டருள்புரிவாயே. (க)

அம்பலவாணாவாறுமாமுகவாவப்பனீயையடீயருணீ (டோ
செம்பதுமல்லாற்சிறியவன்போற்றிச் சேர்வதற்கோரிடமுன்
னெம்பெருமானேயேகனேயார்க்குமீசனேயென்னுயிர்க்குயிரே
உம்பர்கட்கிலவாவுமையவள்கணவாவுன்னிடஞ்சேர்த்தருள்வாயே.

வண்டுநேர்குழலாண்மங்கையோர்பாகாவானவர்மாதவரடியார், கண்டுளோர்போற்றிசெய்திடக்கனகசபையினின்றாடுங்கருப்பே, பண்டுநான்செய்தபாவங்களனைத்தும் பகலவன்முன்பனியாக்கித், தண்டையுஞ்சிலம்புமார்க்குமுன்றாளைச்சார்ந்திடவருள்புரிவாயே. (௩)

அண்டருக்கரியாயடியவர்க்கெளியாயாரெனக்குறவுநீயல்லாற், றொண்டருக்கேவல்செய்தொழியாதசுகத்தினில்வைத்திடுஞ்சுகனே, வண்டமிழ்ப்பாண்டிநாடுவாழ்ந்தேத்தவைகையையடைத்தவானவனே, கண்டவர்பாதங்கலந்திடவாடுங்கடவுளேயருள்புரிவாயே. (௪)

செய்யனேசெல்வாதிருநடராசாசேவடிபோற்றுவோர்தன்னை
யுய்யனேரருளுமுத்தமாவுவணகேதனன்றேடிடாதா
மெய்யனேதேவதேவனேவலியமேனரவில்லாக்கியகரனே
யையனேயடியேனலந்திடாதம்பொனடியிணையருள்புரிவாயே.

கானவர்வலையிற்கட்டுண்டகலைபோற்கலங்கினேனென்பனநயறிந்து, மேனெனக்கேட்டுமிடுக்கணைத்தீராதிருப்பதுமிறைக்கழகாமோ, தேனலர்கொன்றைநிறந்திடுமெய்யாதிருநடஞ்செய்திடுஞ்செய்யா, நானெனுமறிவுமாறிடவருட்கணல்கியாண்டருள்புரிவாயே. (௬)

அந்தியும்பகலுமெந்தநேரமுமுன்னடியிணைகண்டுவர்ச்சித்து
சிந்தையையடக்கித்திருவடிபோற்றுஞ்சீர்வரந்தந்தருளையா
மந்திரிமுதலாமடியவாதனக்குமகிழ்ந்தருள்செய்தமாமணியே
யெந்தனைக்காராதிருந்திடலழகோயிரங்கியாண்டருள்புரிவாயே

கற்றவத்தோர்களறிவினின்றாய் நாயகா நானிலத்துள்ள
மற்றவரேத்தமன்றினிலாடும் மாதவா மரகதவல்லி
யுற்றவோர்பாகா வுன்னையல்லாதோருறவினருலகினில்லை
செற்றவர்புரங்கள்செற்றவா சிறியேன்றீவினை தீர்த்தருள்வாயே

கூடலம்பதியிற்குதிரையாய்நரியைக்கொடுத்துநின்னடியனைக்காத்திவ், வாடலம்பதியிலடியிணைகொடுத்தாயாதியேயுன்னை யாரறிவார், சேடனுந்தேவர்முனிவரும்பாடற்கரியநின்றிறத்தினையிந்த, மூடனோபாடவல்லவனிரங்கிமூதறிவருள்புரிவாயே.()

அற்புதக்கூத்தாவம்பலவாணவடியிணைபோற்றினேன்போற்றி, கற்பதமருளுநாயகாவுமதுநாயகிமலர்ப்பதம்போற்றி, சிற்பதமருளுஞ்சிந்துரவதனன்சீறடிபோற்றினேன்போற்றி, பொற்பதந்தந்தவாறுமாமுகன்றாள்போற்றிநற்சண்டிதாள்போற்றி.

இல்லையம்பலத்திற்றிருநடம்புரியுஞ் செல்வர்பாதாம்புயம் வாழி, அல்லலையறுத்துநல்விழிதந்தவாறுமாமுகன்பதம்வாழி, யில்லையென்றிரப்போர்க்கீந்திடுவோர்க ளிமையவரிறையவர்வாழி, சொல்லுதற்கரியமறையவர்தொண்டர்சுரபியான்வையமு வாழி. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

ஆகச்செய்யுள் - ௨௪௮.

## இருபத்தாறாவது-திருவண்ணாமலை.

திருச்சிற்றம்பலம்.

ஒளியார்வதனத்துண்ணாமுலையாளொருபங்குடையானை
யளியார்கொன்றையம்புலிகங்கையணியார்முடியானைப்

தெளியார்பாசத்தீவினைநீக்கித்திருவடியீவானை
யெளியேன்பாடியிணையடிபெறநல்லிசைசேர்கணபதியே. (க)

சீர்சேரண்ணாமலையாசிவனேதிருமாலறியாத
பேர்சேர்பாதப்பேரருள்செய்வாய்பிரமாவறிவரிய
நீர்சேர்வேணிநின்மலனேநின்னிழலார்தரவல்லார்
வார்சேர்கொங்கைவனிதைமணாளாவருணீதருவாயே (உ)

அண்டர்க்கரியாயுன்றிருவாடலறியார்வல்லாரோ
தொண்டர்க்கருள்வாய்மற்றவர்தன்னைத்துயரத்துழல்விப்பாய்
சண்டைப்பொருதாளுடையானேசயிலத்துருவானே
வண்டைப்பொருதும்பூங்குழன்மங்கைமகிழ்ந்தவருள்வாயே (௩)

பூவார்மார்பாபுரிசேர்சடையாபொன்னார்மேனியனே
மூவாயிரவரிலொன்றாய்நின்றாய்முக்கண்ணுடையானே
பாவார்வாயார்பற்றியபாதாபரைபங்குடையானே
காவாகருணைக்கருணைக்கடலேகாவாய்காவாயே. (௪)

பொன்னார்கொன்றைபுனையுமுடியாபுலியேயுடையானே
யென்றேய்திரவிறையேயருள்வாயெழிலேறுடையானே
சின்னூலிடையாள்சேரும்பாகா திருவண்ணாமலையா
மன்றுவடிவார்மறிசேர்கரனேமகிழ்வாயருள்வாயே. (௫)

செய்யாசெல்வாதிருவாதிரையாதிரிசூலப்படையா
மையார்கண்டாமலைமகள்பங்காமயிலோனுய்வந்த
வையாவானோர்வாழ்ந்திடவண்டர்மாண்டிடவேவெருட்ட
கையாவருள்சேர்கருணைக்கரசேகாவாய்காவாயே. (௬)

திருவாழருணைத்தீவண்ணநின்செயலாரறிவாரோ
பெருவாழ்வருள்வாய்பிணையாரருள்வார்பேசற்கரியானே
அருவாயுருவாயரியாயயனாய்ப்பிகைபாகனுமாய்
வருவாய்வரதாவாழ்வருள்செய்வாய்வாழ்வருள்செய்வாயே. (எ)

செங்கேதன்மல்கும்பூமகள்கேள்வன்றேடற்கரியானே
வங்கேதனுன்றன்மலரடிதேடவையாநின்றேனே
கொங்கேதன்சீர்சேர்நுண்ணிடையுண்ணாமுலையாள்பங்கோனே
யங்கோவங்கோவாவெணையாள்வாரருள்வாயருள்வாயே. (அ)

அருள்சேரண்ணாமலையாவுன்றாளடையும்பெரியோரை
யிருள்சேராதவின்பந்தருவாயென்றொருபாகா
பொருள்சேர்மறைகடேடிடுமரியபூவடியுடையானே
மருள்சேராதன்மகிழ்தருவாய்மகிழ்தருவாயே. (௯)

அப்பாவண்ணாமலையாவுன்றனம்பொன்னடிபோற்றி
செப்பாருண்ணாமுலையாளொன்றாய்திருவடியேபோற்றி
யொப்பாரில்லாவொளிசேர்வேலனுயர்தாளிணைபோற்றி
தப்பாதருணந்திமுகன்றாள்சார்ந்தாரடிபோற்றி. (௧0)

அண்ணாமலையான்றிருநாமமறைவோர்கள்வாழி
யெண்ணார்மறைகளிருடிகடேவரெழில்சேர்பசுவாழி
தண்ணார்நீரைச்சொரிதருவானந்தளிர்பூங்காவாழி
மண்ணாளரசர்மறையோரடியார்வாழிமலிந்திடவே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

ஆகச்செய்யுள் - ௨௫௬.

# இருபத்தேழாவது-செருத்தணிகை.

திருச்சிற்றம்பலம்.

திருமலிசெல்வச்செருத்தணிவரையிற்சிறப்புடனினிதுவீற்றிருந்து, அருண்மலிந்தடியார்க்கமுதினையூட்டுமோறுமாமுகன்பதம்பாடிப், பொருண்மலிந்திலங்கப்பூவடிபோற்றப்பொன்னெடுங்கோவிலினுறையும், மருமலிந்திலங்குமாலையார்மார்பன்வாரணமுகன்றுணையாமே. (௧)

சீர்செறிசெல்வச்செருத்தணிதனிலார் திருமுருகானினதருள்போ, லாரறிவருள்வாராரெனையாள்வாரப்பனீயம்மைநீயையா, வார்செறிகொங்கைவள்ளிபங்காளா வரைபடவெறிந்தவைவேலா, நேர்செறிந்திந்தநிழலினில்லென்றுநீயெனக்கருடருவாயே. (௨)

பொன்னவர்சிறையைவிடுத்தருள்செய்து பூம்பொழிற்செருத்தணிவரைமேல், மன்னவர்போலவிருந்தடியார்கண்மகிழ்ந்திடவருடருமமுதே, யென்னுயிர்க்குயிரேயின்பனேயென்றுமேயனலங்கிள்ளையோர்பாகா, வுன்னையேநம்பியிருக்குமிவ்வேழையுகந்திடக்கிருபைகூர்வாயே. (௩)

அன்பனேயன்பரிதயத்திலமருமமுதனேசெருத்தணிவரையி, லின்பனேயின்பந் தருந்தனிமுதலேயேகனேயென்னையாட்கொண்ட, முண்டனேமுன்புசெய்வினைவிலக்கிமுன்னின்றமுதறிவருளி, யுன்பொனேர்திருத்தாடன்னிலேசேர்ப்பாயோகனேயொப்பிலாமணியே. (௪)

வானவர்நாடுமென்னதென்றுயர்ந்துவளர்ந்திடுஞ்செருத்தணி வரையிற், றேனலர்மாலைசூடியமாதர்திருநடஞ்செய்திசைபாட, கானவர்வளர்த்தகன்னியுந்தெய்வகன்னியுங்கலந்தடிவருட, ஞானமேயுருவாயிருந்தருள்வோனேநாதனேநலம்புரிவாயே. (௫)

கருணையேயுருவமாகியமுதல்வா கதிர்செறிசெருத்தணிவரையா, வருணைபோர்சிறந்தவம்பலமுதலாமழகியதலந்தொறுமிருந்து, மருளையேகழித்துமலரடிகொடுத்து மகிழ்ந்தடியவர்களைக் காத்துப், பொருளையீந்துதவும்புண்ணியாவுனதுபொன்னடியெனக்கருள்வாயே. (௬)

கன்னலங்கழனிசூழ்செருத்தணிகைக் கடவுளேகதிர்வடிவேலா, வுன்மனங்கல்லோவுளமிரங்கலையோவின்னமுமேழ்வலியுண்டோ, சின்மயரூபாசேவலங்கொடியாய் தேவரீர்பராமுகமானா, லென்னநான்செய்வேனெவர்க்கெடுத்துரைப்பே னெந்தையேயுகந்தருள்வாயே. (௭)

வானுலாமதியத்தவடிருத்தணிகை மலையில்வாழ்மாதவமகிழ்ந்து, கானவர்மாதைவேட்டருள்செய்யக்கானகவேடனாய்வந்தாய், பானலந்திகழும் பத்தரைக்காக்கப் பலதிருவேடனாய்வந்தாய், நானிலமனைத்தும்பரந்தருள்செய்யுநாதனேகருணைகூர்வாயே

பச்சைமாமஞ்ஞைதிருநடம்புரியும்பரிசுடைச்செருத்தணிதனில்வாழ், செச்சைசூடியனற்றேவனேயுமதுதிருவடிபோற்றிடுஞ்சிறியேன், கொச்சைவாய்க்குதலைமொழியனென்றிரங்கிக்கு

றையெலாங்கருணையாலகற்றி, யிச்சையைவிளைக்கும் வினையை
வேரறுத்துமின்புறக்கருணைகூர்வாயே. (௯)

எல்லையில்லாதசோதியேயுலகோரேத்திடுஞ்செருத்தணிதனிலே, யில்லையென்றிரப்போர்க்கிடுக்கிடவிருக்குமிறைவனையென்குலவிளக்கே, யல்லலையறுத்துன்னடியரைக்காக்குமாறுமாமுகப்பெருமானே, கல்லையுந்தூளுடலையும்பிளந்த கடவுளே கருணைகூர்வாயே. (௧௦)

இக்கெகாமலர்க்காசிறந்திடுஞ்சீர்சேர் செருத்தணிமலைவிருந்தருளு, முக்கணையகனே திருமலர்ப்பாதம் முடிமிசைசூட்டினாள்போற்றி, செக்கர்வானிறத்துச்செல்வனேயாயேசேவடிக்கணுதினப்போற்றி, பக்குவமறியாவென்றனைக்காத்துப்பன்னிருபுயாசலபோற்றி. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

ஆகச்செய்யுள் ௨௭௦.

---

# இருபத்தெட்டாவது-திருப்போரூர்.

திருச்சிற்றம்பலம்.

ஆனைமுகவாவம்பலவாவாறுமுகவாவாதிசத்தி
வானம்புவனமெங்கணுநன்பணியாயொளியாய்மதிரவியாய்
ஞானவெளியாய்நாளிலமாய்கலமாயெங்குந்தானுதி
மோனமுனிவோர்க்கருள்புரியுமுருகாவருள்போரூரானே. (௧)

செந்தாமரையாடிருமருகாசெல்வாவலியவவுணர்சிரம்
பந்தாயுருளவேலெறிட்டபாலாபாசவினையகற்றுங்
கந்தாகடம்பாகாங்கேயாகார்த்திகேயாகண்மணியே
வந்தேனுனதுதிருவடிக்கீழ்வைத்தாடிருப்போரூரானே. (௧)

நற்கீரற்குமருள்புரிந்தநாதாநாயேன்றனக்குனது
பொற்பாதத்தின்றுணையல்லாற்புவியில்வேறோர்துணையுளதோ
சிற்பாய்வினைவினிந்திரையினெடியமனறயோன்போல்வந்து
கற்பாயிதைநீயென்றுதந்தாய்கரும்பேதிருப்போரூரானே. (௨)

அம்பொற்பாதத்துக்கடியேனுமாளாகுவனோவென்றழுது
வெம்பித்திரிந்தேன்வேன்முருகாவினையைத்தறித்துவெளியானை
யும்பற்கரியாயுன்றனுலகத்துழல்வோருணர்வாரோ
பைம்பொற்கிளிபோலழகிவள்ளிபங்காதிருப்போரூரானே.

பொன்னாட்டமரர்க்கருள்புரியப்புள்ளிமயிலிலினிதேறி
மின்னார்வேலைவிடுத்துவிறலவுணர்குழாத்தைவேரறுத்து
தென்னாடேறும்படிசெய்தசெல்வாசிறியேன்றனைக்காக்கும்
மன்னாமணியேமணிவிளக்கேமகிடாதிருப்போரூரானே. (௫)

பைந்தாதிறைக்கும்மலர்தருக்கள்பாங்கிற்சூழவதிலிருந்து
கந்தாகந்தாவென்றுபலகவினைசேர்பட்சிக்குழாங்கூவ (௬
நொந்தோம்நோதீர்த்தருள்வாய்நோக்காலென்றுபலர்போற்று
சிந்தாமணியேதிருக்கோவிற்செல்வாவருள்போரூரானே. (௬)

எங்குந்தானாயிருந்திலங்குமெழிலோயெளியேன்றனைக்காத்து
மங்குமறிவைவளர்த்துனதுமலர்ப்பாதத்தைப்பூசைசெய்து

MAHAMAHOPADHYAYA
... SWAMINATHA IYER LIBRARY.

பொங்குங்கருணைவெள்ளத்திற்பொருந்திக்குளித்துப் போற்றி
செய்து, தங்கும்படிநல்லருளிந்தாய்தாதா; பொன்போரூரானே.

அன்னைபிதாநற்குருதெய்வமனைத்துநீயேயவனிதனிற்
பின்னையொருவருளரோயான்பேசற்கரியபெரியோனே
சின்னூலிடையார்வள்ளிதெய்வயானைக்கினியதேவாநற்
பொன்றுமணியா பூமுடியாபோதாவருள்போரூரானே. (௭)

செய்யாசெல்வா திருவடிவேல் சிறக்குஞ்செந்தாமரைப்பூப்போ
சையாகதிரைகடற்செந்திற்கவின்சேர்பழனிகழுகுமலை (ரு
ஐயாவருள்சேர்பரங்குன்றமருணதணிகைதலந்தோறும்
மெய்யாயிருந்துகருணைசெய்யுவிமலாவருள்போரூரானே. (௮)

வஞ்சப்புலனும்வேடுவனாவலையுட்படுத்திவாலறிவை
மிஞ்சும்படிக்குவளர்த்தருள்வாய்வெறியேனிதற்குவழியறியேன்
றஞ்சம்நினதுசரணெல்லாற்றமியேனுக்கோரிடமில்லை
மஞ்சைப்பிளந்தவேற்படையாமகிடாதிருப்போரூரானே. ( )

வாழிவடிவேல்காத்தேந்தும்வள்ளலடியார்வான்வையம்
வாழிமறையோர்மலற்றருக்கள்மன்னர்பசுக்கள்மறைசோவில்
வாழிதருமநன்மைநன்னீர்வாவிகூவல்மயிலின ங்கள்
வாழியின்னூலன்போடுவாதன்றன்முன்படித்தோரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

ஆகச்செய்யுள்- ௨௮௧.

# இருபத்தொன்பதாவது-திருப்பரங்குன்றம்.

திருச்சிற்றம்பலம்.

ஏருலகுளோர்போற்றுமின் பரங்குன்றில்வா
    ழெந்தையேவேலாயுதா
வெளியனான்செய்தகுறையேதென் றுவறிகிலே
    னெம்பிரானின்னையன்றிச்
சீருலகில்வேறுமோர்கதியெனக்கில்லையுன்
    சேவடியலாதுவேறு
சீர்வளமுமில்லையென்சிந்தையுன்சிந்தையாச்
    சேரநல்லருள்புரிகுவாய்
காருலவுகுழன்மாதுமக்களென்றெண்ணமென்
    கருத்தனைவருத்தாமலுன்
காலிணைப்பூசித்துமாமயலைநீக்கிடக்
    கடாட்சமருள்வாய்கந்தனே
வாருலவுதனவள்ளிமங்கைமகிழ்சுந்தரா
    வரைமாதுதந்தபுதல்வா
வாரணத்தோனுக்குவிளையதிருவள்ளலே
    வாழியருள்வாழியருளே. (௧)

திருச்சிற்றம்பலம்.

ஆகச்செய்யுள்-உஅ௨.

---

# முப்பதாவது-திருக்கழுகுமலை.

திருச்சிற்றம்பலம்.

ஓங்காரவடிவானமுருகநற்கழுகுமலை
யுக்ரவடிவேலாயுதா
உன்பாதமலர்தந்துவென்பாசவினைதீர்த்து
[illegible]ன்கருணைமென்மேலுமா
ஆங்காரமாய்வாரா வருள்புரியவேண்டினே
னையநின்கருணைவெள்ளத்
தாழ்ந்துவார்கன்மாலனைவைப்பொறியைவென்றுநின்
னருள்வடிவமாகியுய்வர்
ரீங்காரவண்டுமொய்ம்மாலையணிமார்தாக்க
விருபுறமுநின்றிலங்கு
சௌந்தரிதேவிநின்பாதமலர்கொண்டவென்
னெண்ணமேபெரியசெல்வப்
பேராங்கார்கணீர்பருகு புணரிமேல்வேல்விட்ட
புலவனேகருணைபுரிவாய்
புண்ணியர்கண்மனதிலுறைதண்ணியகடப்பமலர்
புனைகந்தசாமிநாதா. (௧)

திருச்சிற்றம்பலம்.

ஆகச்செய்யுள் - உஅ௱.

# முப்பத்தோராவது-திருநாதகிரி.

திருச்சிற்றம்பலம்.

நாதகிரியென்னுமாமலையிலருள்வடிவான
நற்சோதிவேலாயுதா
நம்பினேனுன்பாதமென்பாசவினையகல
நாளுமருள்செய்துவுன்றன்
ப[illegible]தபொற்பூசைசெய்பாக்கியமெனுளுமென்
பணிவிடையதாகவுய்த்துப்
பக்தரட்சகவுனதுபாதமலர்சேர்ந்திடப்
பட்சம்வைத்தருளவேணுங்
காதலுற்றுறைவள்ளிகண்டுமகிழ்கொண்டிடக்
கானகத்தேநடித்தாய்
கன்றுமொழிதெய்வானையன்றமரீந்திடக்
கைப்பிடித்தகமகிழ்ந்தாய்
வாதமுற்றிடுமுனிவர்வந்தடிபோற்றிமிகு
வாலறிவுபெற்றுவாழ்வார்
வரதவோமறுமுகவவள்ளலேநின்னடியர்
வாழிமல்கிடவாழியே,

திருச்சிற்றம்பலம்.

ஆகச்செய்யுள் - ௨௮௪.

# முப்பத்திரண்டாவது-திருவொற்றியூர்.

திருச்சிற்றம்பலம்.

முன்பனே திருவின்பமே தரு முன்னவாவடிபோற்றினே
னன்பனேயெனையாண்டவேலவர்க்கப்பனேயருளாகனே
யின்பனேயெழிலம்மைசேர்ந்தவிடத்தனேயடியேன்றனக்
குன்பொனேர்பதந்தன்னையீந்தருளொற்றியூருறையோகனே, ௧

அன்னைசுந்தரிக்கழகுசேர்மணவாளனேயடியார்கட
மின்னனீக்கிடுமெந்தையேயுலகெங்குமாகியவித்தையே
கன்னறின்சுவைகாட்டிநின்கழற்காலிற்பிள்ளையைக்கூட்டிஞ
யென்னைநின்னடிக்கேற்றுவாய்திருவொற்றியூருறையேகனே.()

திருஞ்செல்வமுஞ்சேர்ந்தவூருஞ்சிறந்தசோலையும்வாவியு
மேருந்தோற்கவிளங்குகோபுரமேவுங்கோவிலின்மேயவா
ஊரும்பேருமுருவுமின்றியுமுள்ளதாயுமுடையவா
வாருமென்றனைக்காருமொற்றியூர்வள்ளலேயருள்வள்ளலே(௩)

அப்பனேநினதடியையல்லதிங்காரைவேண்டியலைகுவேன்
செப்புநேர்முலைமங்கைபாகனேசீர்தருஞ்சிவலோகனே
யெப்பநின்னடிசேருவேனிகமெய்திடாவகைவாழவே
ஞெப்பவொன்றிலதானவொற்றியிலொருவனேயருளொருவ
னே. (௪)

எங்குமாகியவீசனேயெளியேன்படுந்துயர்நீக்கிநின்
பங்குசேர்த்தினியாளுவாய்திருப்பாரில்வேறெனக்காரிலை
திங்கள்சூடியசெல்வனேதிகழ்செக்கர்வாணிறத்தேவனே
யெங்கடாய்க்கிடமீந்தவாவருளொற்றியூருறையீசனே. (௫)

முத்துநேர்நகைச்சங்கிலிக்கருண்முற்றளித்திரைவேலையிற்
சித்துருபமெடுத்துவந்துசிறந்தசுந்தரன்றன்னைநீ
கொத்துமாமலர்மகிழடிதனிற்கூறுசத்தியமொன்றுகேட்
டொத்துவாழெனச்சொற்றவாவருளொற்றியூருடையோகனே

அடியவர்க்கருள்செய்யவேயுருவாகுமற்புதவண்ணலே
வடிவுசேர்ந்திடுபோகனேவளர்மான்மழுக்கரம்வைத்துவா
பொடிகளார்ந்திடுமோகனேபுலித்தோல்புனைந்திடுபுண்ணியா
கொடியமாயையைநீக்கிநின்னருள்கூட்டுகோவொற்றியூரனே.

கொன்றைசூடியகோலனேயறக்கோதைபங்குடையாகனே
கன்றைவீசியகண்ணன்றேடியகாலனேகடையூரனே
குன்றைநீள்சிலையாக்கிமும்மலக்கோட்டைமாளநகைத்தவா
வொன்றைவேண்டிலவொற்றியூருடை யொருவனேயுளமுன்ன
தே. (௮)

செய்யனேதிருக்கையனேதிகடவிபாகமதானநன்
மெய்யனேயருள்வேலனாகியவேடனேயருண்மேலனே
துய்யனேசகலோகனேசுகமேதருந்திருப்பாதனே
யையனேநினையன்றினேனருளொற்றியூருறையப்பனே. (௯)

போற்றினேன்றிருப்பாதமேதுணை புகலவேறிடமில்லையிக்
கூற்றினோர்மலக் கூட்டிலைம்புலக் கூத்தர்கூத்தையொழிந்தரு
ளேற்றுனேர்கொடியெந்தையேயென தென்னைமுன்றிருச்சிந்
தையே, சாற்றினேன்றிருவொற்றியூருறை தந்தையேயருடந்
தையே. (௧௦)

வாழிநான்மறைவையம்வானம்மழைதருமுகில்வாழிசீர்
வாழிவேந்தர்கண்மாமலர்த்திருமாதவத்தர்கள்வாழியூர்
வாழியந்தணர்வள்ளலாரடியார்களானினம்வாழிநேர்
வாழியிக்கவிபாடியொற்றியில்வரதனாரடிவாழியே. (கக)

ஆகச்செய்யுள் - உகரு.

திருச்சிற்றம்பலம்.

## போற்றிவிருத்தம்.

வண்டமிழ்ச்சிறக்கச்செய்தவாரணமுகன்றாள்போற்றி
யண்டரையலைத்தவாலமடக்கியகண்டாபோற்றி
தொண்டரைப்பசிநோய்தீர்த்துத்தாதுபோய்மீட்டாய்போற்றி
சண்டனைமார்க்கண்டர்க்காய்ச்சாடியசரணம்போற்றி. (க)

பாடவுமறியேன்பதவுரையறியேன்பத்தர்கள்வலையினிற்சிக்கி மாடரவப்பூணணிந்தவன்பாதத்தருளினலன்புடன்சொன்னேன், நேடவுமரியவரன்றிருத்தொண்டர் சேவடிக்கடியவரடியே, னாடவுமாடியமரவுமானேனாரெனென்றுபோற்றிவாழ்வீரே,

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
வாழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


திருச்சிற்றம்பலம்.

---

௬௧-வது பக்கத்தில் பதிநான்காவது என்பதைப்
பதினான்காவது எனத் திருத்துக.

# சிவபாததோத்திரபூஷணம்.

முற்றிற்று.



உ

சிவமயம்.

# புத்தகவிளம்பரம்.

| | ரூபா. | அணா. | பை. |
|---|---|---|---|
| தமிழ்ப்பேரகராதி | ௨ | ௮ | ,, |
| சிவக்ஷேத்திராலயமகோற்சவ உண்மைவிளக்கம் | ,, | ௬ | ,, |
| ஏகாதசிபுராணம் அரும்பத உரையுடன் | ,, | ௪ | ,, |
| சைவபூஷணசந்திரிகை | ,, | ௨ | ௬ |
| கதிர்காமக்கலம்பகம் | ,, | ௧ | ௬ |
| பட்டினத்துப்பிள்ளையார்புராணம் மூலமும் உரையும் ௧-பாரச்சஞ்சிகை ஒன்றற்கு விலை | ,, | ௪ | ,, |

வேண்டியோர் யாழ்ப்பாணத்து மேலைப்புலோலி, புதுச்சந்நிதிக் கந்தசுவாமிகோயிற் றருமகர்த்தரான ஸ்ரீமத் - க-நாகப்பபிள்ளை அவர்களிடத்தில் பெற்றுக்கொள்வாராக.

இங்ஙனம்,

ந. க.